
பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.



**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1–12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்,

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—3 |

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.


முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.


பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்—குறள்.


| மாலை க | குரோதன-ஹு மாசி-மீ ௩-வ (14—2—26) ஞாயிற்றுக்கிழமை | மணி ௪௧ |
|---|---|---|





மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

S. இராமநாதன்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

S இராமநாதன் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## சுசீந்திரம் சத்தியாக்கிரகம்.

4—2—25.

4-2-25ல், மகமது இப்ராஹிமும், செங்கோட்டை என்பவரும், கதர் உடையுடன் தெருவில் செல்ல தடுக்கப்பட்டனர். 8-2-25-ல் ரமாகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த, சுவாமி ஞானானந்தர் சத்தியாக்கிரகத்தைப் பார்வையிட்டு, நல்ல அபிப்பிராயம் கொடுத்தார். சுசீந்திரம் சத்தியாக்கிரகிகள், சத்தியாக்கிரகத்தின் உண்மைத் தத்துவத்தை நன்கு அறிந்திருப்பது பற்றி சந்தோஷித்துப் பேசினார். என சத்தியாக்கிரக கமிட்டி காரியதரிசி தெரிவிக்கிறார்.

(பின்னால் வந்த செய்தி)

ஸ்ரீமான். டி. கே. மாதவன் கல்கத்தாவில் சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தைப் பற்றி ஸ்ரீமான். சென்குப்தா அவர்கள் தலைமையின் கீழ் பேசியதாகவும், சுசீந்திரம் கோயிலில் வேலை செய்யும் ஜாதி இந்துக்கள் கதராடை அணிந்த காரணத்தினால் கோயிலுக்குள் செல்ல அநுமதிக்கவில்லையென்றும், தொண்டர்களை இம்சைப்படுத்துவதாகவும், எவ்வளவு கோபமூட்டப்பட்டபோதிலும், எவ்வளவு கொடுமை செய்தபோதிலும், அவைகளை லக்ஷியம் செய்யாமல் அஹிம்சா தர்மத்தோடும், பொறுமையோடும் இருக்க வேண்டுமென்று டாக்டர். எம். பெருமாள் நாயுடு உபதேசித்து வருவதாகவும், தொண்டர்களும் அஹிம்சையோடு சகல கஷ்டங்களையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டிருப்பதாகவும், எதிரி தரப்பினர்கள் தெருவில் வேலிகளைப்போட்டுக்கொண்டிருப்பதைச் சர்க்காரார் கவனியாமல் அசிரத்தையாயிருக்கிறார்களென்றும், இவற்றைக் கவனிக்கும்போது கவர்ன்மெண்டின் மனோபாவத்தைக் கண்டு, ஜனங்கள் சந்தேகப்படுகிறார்களென்றும் காரியதரிசி எழுதுகிறார்.

## 12—ந் தேதி வந்த தந்தி.

சத்தியாக்கிரகிகளைக் குடிகாரர்களைவிட்டு உபத்திரவப் படுத்துவதாகவும், ஸ்ரீமான்கள். ராந்திதாஸ் முத்துசாமியும், சின்னத்தம்பியும் பலமாய் அடிக்கப்பட்டதாகவும், அவர்களும் மற்றத் தொண்டர்களும், வந்தே மாதரம் என்றும் மகாத்மா காந்திக்கு ஜேய், என்றும் சொல்லிக்கொண்டு பொறுமையோடிருந்ததாகவும், போலீசார் வந்து அடித்தவர்கள் பெயரைச் சொல்லக் கேட்டும் கூட தொண்டர்கள் சொல்ல மறுத்துவிட்டார்களென்றும், சத்தியாக்கிரகிகள் உற்சாகத்துடனேயே இருந்துகொண்டு வருகின்றார்களென்றும், செய்தி கிடைத்திருக்கிறது.

## சட்டசபை தேர்தல் செலவுக்குப் பணவசூலும் நம் நாட்டின் தலை எழுத்தும்.

வரப்போகும் சட்டசபைக்குப் பிராமணர்களும் அவர்களுக்கடங்கின மற்ற வகுப்பாருமே சட்டசபையைக் கைப்பற்றத்தகுந்த மாதிரிக்குப் பிரசாரம் செய்ய நிதி வசூல் செய்ய வேண்டியதே, காங்கிரஸ் தலைவர்கள் என்னும் நம் பிராமணத் தலைவர்களுக்கு முக்கிய வேலையாய்ப்போய் விட்டது. அதற்காகச் செய்யப்படும் பல தந்திரங்களில், மடாதிபதிகளை ஏய்த்துப்பணம் வாங்குவதும் முக்கிய சூழ்ச்சிகளில் ஒன்றாக இப்போது அமுலில் இருக்கிறதை வாசகர்கள் அறிந்ததே. அதற்கு ஆதாரமாகவே ஸ்ரீமான்கள். சி. வி. வெங்கிடரமணய்யங்காரும், ஸ்ரீனிவாசய்யங்காரும் அடிக்கடி மடாதிபதிகளைப்போய் பார்ப்பதும், ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியும், சி. வி. வெங்கிடரமண அய்யங்காரும் சட்டசபைகளில் பிரயோஜனமில்லாத தத்துவங்களைக்கொண்டு தேவஸ்தான மசோதாவைத் திருத்தவும் மாற்றவும் அடிக்கடி பிரேரேபணைகள் கொண்டுவருவதும், உபயோகமற்ற கேள்விகளைக் கேட்பதுமான காரியங்களைச் செய்தும் மடாதிபதிகளையும், மகந்துக்களையும் ஏமாற்றப் பார்க்கிறதைக் கவனித்தாலே உண்மை விளங்கும். சட்டசபையில் பிராமணரல்லாதாருக்குள்ளாகவே, மந்திரி கட்சியார், என்றும் அவர்களுக்கு விரோதமாக பொருமையின் பேரிலோ, அல்லது மந்திரிகளின் நடத்தைக்குறைவினாலோ பிரிந்திருக்கும் எதிர்க்கக்ஷியாரும் இத்தேவஸ்தான விஷயம் சட்ட சபையில் வரும்போது, ஒற்றுமையாயிருந்து சட்டத்துக்கனுகூலமாய் ஓட்டு கொடுப்பதும், பிராமணர்கள் எல்லாம் ஒற்றுமையாயிருந்து அச்சட்டத்தை எப்படியாவது ஒழிப்பதற்கு அநுகூலமாய் இருந்து ஓட்டு கொடுப்பதும், கவனிக்கிறவர்களுக்கு தேவஸ்தான சட்ட விஷயமான கிளர்ச்சி பிராமணர்—பிராமணரல்லாதார் என்கிற வகுப்பு வேற்றுமைக் கிளர்ச்சியில் சேர்ந்தது என்பது விளங்கும்.

இப்படி இருக்க, பிராமணரல்லாத மடாதிபதிகளும் கொஞ்சமும் தங்கள் மடத்தின் சொத்துகள் யாருடையது என்பதையும், யாருக்காக தாங்கள் இருக்கிறார்கள் என்பதையும் கவனிக்காமல் தங்கள் போகத்தையும், போக்கியத்தையும் பிரதானமாகக் கருதிக்கொண்டு, அனாவசியமாய் மடத்துச்சொத்தை திருடி பிராமணர்களுக்குக்கொடுத்து பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் இச்சட்டத்தை, ஒழிக்கப்பார்க்கிறார்கள். நமது நாட்டின் தலையெழுத்துக்களில் எதற்கென்று தான் நாம் அழ முடியும்! க்ஷயரோகம்போல் நம் நாட்டைப் பிடித்து நாளுக்கு நாள் அறித்துக்கொண்டுவரும் அரசாட்சியின் கீழ் இருப்பதற்கழுவதா? அல்லது நமது நாட்டை அன்னிய ஆட்சிக்குக் காட்டிக்கொடுத்து நமக்குள் இருந்துகொண்டே குடியைக்கெடுத்து நம்மை தீண்டாதாராக்கிவைத்திருக்கும் பிராமண தர்மத்திற்கழுவதா? அல்லது நம்மவரிலேயே சிலர் தமது சமூகத்தையே மறந்து, தனது வாழ்வையும், பெருமையையும், போக போக்கியத்தையுமே பிரதானமாய் கருதி நமக்குள் இருந்துகொண்டே நம்மைப் பிராமணருக்குக் காட்டிக்கொடுத்தும், அவர்களுக்கு அடிமையாகச் செய்வதுமான பிராமணரல்லாத மடாதிபதிகள் என்றும், தேசிய வாதிகள் என்றும் சொல்லிக்கொண்டு வாழும் கோடாலிக்காம்புகளுக்கு அழுவதா? நம் நாட்டின் தலைவிதி யாரே அறிவார்!

## பெரிய இடத்துக் கதர் கலியாணம்.

புதுப்பாளையம் ஜமீன்தார் ஸ்ரீமான். பி. கே. இரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள் குமாரத்திகள் ஸ்ரீமதிகள்-சௌபாக்கியவதிகளான பாப்பம்மாள், காளியம்மாள் ஆகிய இருவருக்கும்—நாளது தைமாதம் 22-ந் தேதி வியாழக்கிழமை புதுப்பாளையத்தில் வெகுவிமரிசையாய் விவாகம் நடந்தேறியது. கல்யாண பெண்களும், மாப்பிள்ளைகளும் பூராவும் கதர் மயமாகவே இருந்தார்கள். கொங்கு நாட்டு வேளாள சமூகத்தில் உள்ள பெரிய இடங்களில் நடந்த கலியாணங்களில் இதுவே பூராவும் கதர் மயமாய் நடந்த கலியாணமென்று சொல்லலாம். ஆதலால் இதை மற்ற வேளாள சகோதரர்களும் பின்பற்றினால் தங்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பெரிய உதவி செய்தவர்களாவார்கள்.

## காங்கிரசில் இருக்க உரிமை உண்டா?

சுயராஜ்யக்கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களும், ஜஸ்டிஸ் கட்சி, மிதவாத கட்சி, தேசியக்கட்சி ஆகியவைகளைச் சேர்ந்தவர்களும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துபவர்களும், சுயராஜ்யக்கட்சி பிராமணக்கட்சி என்று முடிவுசெய்து கொண்டிருக்கிறவர்களும், பழய ஒத்துழையா தத்துவத்திலேயே நம்பிக்கை இருக்கிறவர்களும், சுயராஜ்யக்கட்சி, பிராமணரல்லாதாரை ஒடுக்கவந்த கட்சியென்று நினைத்து, சுயராஜ்யக் கட்சியை பஹிஷ்கரிக்கவோ அதை ஒழிக்கவோ பிரசாரம் செய்ய வேண்டுமென்கிறவர்களும், நிர்மாணத்திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும், காங்கிரசில் இருக்கலாமா என்றும், இவர்களில் யாரையாவது காங்கிரசை விட்டுப்போகச் சொல்ல யாருக்காவது உரிமை உண்டா என்றும் இன்னும் பலர் பலவிதமாக நம்மை நேரிலும், எழுத்துமூலமாகவும் அடிக்கடி கேட்டு வருகிறார்கள். இந்தியா நீதியும் அமைதியுமான வழிகளில் சுயராஜ்யம் பெற வேண்டும் என்கிற தத்துவத்தை ஒப்புக் கொள்பவர்களான எல்லோரும் காங்கிரசிலிருக்க பாத்தியமுடையவர்கள். அதின் திட்டங்களில் அவநம்பிக்கையும் அபிப்பிராய பேதமும், எதிர்ப்பிரசாரம் செய்ய வேண்டிய அவசியமும் இருப்பதினாலேயே காங்கிரசை விட்டுப்போய்விடவேண்டும் என்று யாரும் நினைக்கவேண்டியதில்லை. உதாரணமாக கயா காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாய் பிரசாரம் செய்த ஸ்ரீமான். தாஸ்-நேரு கோஷ்டியாரும், தமிழ்நாட்டில் டில்லி காகிநாடா காங்கிரசுக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்த ஸ்ரீமான்கள். சி. ராஜகோபாலாச்சாரியார், ஈ. வெ. ராமசாமி நாய்க்கர், எஸ். ராமநாதன் முதலியோரின் அபிப்பிராயம் கொண்ட கோஷ்டியாரும் காங்கிரசிலிருந்து கொண்டே தங்கள் பிரசாரத்தை செய்து வந்திருக்கிறார்கள் என்பதையும், இனியும் தங்களுக்கு இஷ்டமில்லாத விஷயங்களில் செய்து கொண்டேயிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.**

நாளது பிப்ரவரி மீ 15-ந் தேதி காலை கதர், தீண்டாமை, வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் ஆகிய பிரசார விஷயமாய் ஸ்ரீமான். நாயக்கர் பாலக்காட்டுக்குப் போகிறார். 20-ந் தேதி பொள்ளாச்சி கொங்கு வேளாள மகாநாட்டுக்கும் போவார்.

## பிராமணர்கள் அகந்தையும், சென்னை நகர பரிபாலனசபையும்.

காங்கிரசின் பெயரையும், காந்தியடிகள் பெயரையும், ஜெயிலுக்குப் போய் கஷ்டப்பட்ட தேசபக்தர்கள் பெயரையும், ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் பணத்தையும், சில பிராமணரல்லாத வயிற்றுப் பிழைப்புத் தலைவர்களின் சமூகத் துரோகத்தையும், கஞ்சிக்கு வகையற்ற சில தொண்டர்களின் காலித்தனத்தையும், ஆதாரமாய் வைத்துக்கொண்டு சென்னை நகரபரிபாலனசபையாகிய கார்ப்பொரேஷனுக்குப் போன சுயராஜ்யக் கட்சி மெம்பர்களில் சில கனவான்கள், கார்ப்பொரேஷனை குட்டிச் சுவராக்குவதோடு இந்தியர்கள் சுய ஆட்சிக்கு கொஞ்சமும் அருகரல்லர்—மானமுடையவரல்லர்—விடுதலை அடையத் தகுதியற்றவர் என்பதை வைரக்கல்லில் பொன் எழுத்தால் எழுதப் பாடுபட்டு வருகிறார்கள்.

சுயராஜ்யக் கட்சியார் என்று சொல்லிக்கொண்டு கார்ப்பரேஷனுக்குச் சில பிராமணரல்லாத கனவான்கள் போயிருந்த போதிலும், அதற்குப் பிராமணர்கள் பணமும், பிராமணப்பத்திரிக்கைகளின் பிரசாரமுமேதான் முக்கியமாயிருந்தபடியால், இவர்களும் அப்பிராமணர்கள் தாளத்திற்குத் தகுந்தபடி ஆடவேண்டியதாய்ப் போயிற்று. அதன் பலனாகவே கார்ப்பரேஷன் கமிஷனரான ஸ்ரீமான். வெங்கிட்டநாராயண நாயுடு என்கிற பிராமணரல்லாத கார்ப்பரேஷன் கமிஷனர் ஒருவரை, எப்படியாவது ஒழித்து அந்த ஸ்தானத்தில் ஒரு பிராமணரையோ, அல்லது தங்கள் தாளத்திற்குத் தகுந்தபடி ஆடும் பிராமணரல்லாத ஒரு சமூகத்துரோகியையோ, கொண்டுவந்து வைக்கத் தங்களால் கூடுமான அக்கிரமங்களையெல்லாம் செய்து வருகிறார்கள். இதைப்பற்றி பிராமணப்பத்திரிக்கைகளில் வரும் விஷயங்களைப் பார்த்தாலே அதன் சிறுமைக் குணம் நன்றாய் விளங்கும். கார்ப்பரேஷனுக்கு மெம்பராய்ப் போயிருப்பவர்கள் யோக்கியதையையும், தாங்கள் என்னென்ன விதமான நடவடிக்கைகளால் இந்த ஸ்தானம் பெற்றோம் என்கிற விஷயத்தையும், தங்கள் நெஞ்சில் கையை வைத்து பார்ப்பார்களானால் இவ்வித சிறுமைக் குணத்திற்கு தாங்கள் அருகர்கள் தான் என்பதைத் தவிர வேறொன்றும் விளங்காது. ஸ்ரீமான். வெங்கிட நாராயணா சம்பளத்தின் மீது பொறாமைப்பட்டு, அவர் சம்பளத்தைக் குறைக்கவேண்டும் என்று ஸ்ரீமான் .. சத்தியமூர்த்திப் பிராமணர், சட்டசபைக்கு ஒரு தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார். அல்லாமலும், கார்ப்பரேஷன் கமிஷனரை சர்க்கார் நியமிக்கக் கூடாது, (தாங்களே தங்கள் அடிமையை) நியமிக்கவேண்டும் என்று ஒரு தீர்மானமும் கொண்டிருக்கிறார்கள். அல்லாமலும், அற்ப விஷயங்களையெல்லாம் வேண்டுமென்றே அதிகப்படுத்திக் கார்ப்பரேஷன் சபையை ஒட்டக்கால் தெரு மாதிரி செய்கிறார்கள்.

கமிஷனர் வீட்டில் ஒரு குழாய் மாற்றிவைத்ததற்காகவும், அவர் வீட்டில் இருந்த தண்ணீர் தொட்டியை கார்ப்பரேஷன் சிப்பந்திகளைக் கொண்டு வெளியாக்கியதற்காகவும், இவர்களின் யோக்கியதையை பரிசிக்கும்படியான ஆயிரக்கணக்கான கேள்விகளும், பிராமணப்பத்திரிக்கைகளில் "இந்தக் கமிஷனர் இனி எதற்கு" என்கிற தலைப்பத்தின் கீழ் இழிவுப் பிரசாரங்களும் நடக்கிறது. இந்த உத்தியோகத்தில் ஸ்ரீமான். வெங்கிட்டநாராயணாவுக்குமுன் இருந்த ஐரோப்பியர், இந்தியர் முதலிய கமிஷனர்கள் காலத்தில் இருந்த சம்பளமும்—நியமனமும் முனிசிபல் சிப்பந்திகள் குடும்ப சகிதமாய் கமிஷனர்கள் வீட்டுக்குப் போய் வேலை செய்ததும், அவர்கள் இஷ்டம்போல் எல்லாம் ஆடினதும், இவர்களுக்கு கொஞ்சமும் கவலையை உண்டுபண்ணவேயில்லை. ஆனால், ஸ்ரீமான் வெங்கிட்டநாராயணா பிராமணரல்லாத இருந்துவிட்டதால் பிராமணர்களுக்குப் பொறுக்கமுடியவில்லை. மற்றப்படி பிராமண அதிகாரிகள் ஒவ்வொரிடங்களில் செய்யும் கொள்ளைகள் கணக்கு வழக்கில்லை. உதாரணமாக, சென்ற ஒரு வருஷத்திற்குள்ளாக கவர்மெண்டு பிராமண அதிகாரிகளில் சிலர் ராமகிருஷ்ண ஹோம் நிதி என்னும் பெயரால், நாடகமாடிக்கொண்டு ஆங்காங்குள்ள சர்க்கார் சிப்பந்திகளைக் கொண்டு 1000, 5000, 10000 ரூபாய்களுக்கு டிக்கட் விற்றுக்கொடுக்கும்படி செய்து, கிராம அதிகாரிகளையும், குடிதனக்காரர்களையும் வியாபாரிகளையும் நெருக்கி டிக்கட் 1-க்கு 10 ரூ வீதம் ஆள் ஒன்றுக்கு 2, 4-5, 10 டிக்கட்டுகள் வீதம் கட்டாயப்படுத்தி அவர்கள் தலையில் கட்டி, தெண்டம் வசூல் செய்வது போல் பணம் வசூல் செய்தார்கள்.—செய்கிறார்கள்—. செய்யவும் போகிறார்கள். இதைப்பற்றி கேட்பதற்கு ஒரு பிராமணரையும் காணோம். ஒரு சுயராஜ்யக்கட்சி மெம்பரையும் காணோம். ஏன்?

நாடக அதிகாரி பிராமணர்—வசூலிக்கும் அதிகாரிகள் பெரும்பாலும் பிராமணர்கள்—இந்தப்பணத்தை அநுபவிப்பதும் ராமகிருஷ்ண மடம் என்று சொல்லப்படும் பிராமண ஆதிக்கமுள்ள பிராமணமடம். இதுநிற்க, கவர்னர் முதலியவர்களுக்கும் I. C. S. உத்தியோகஸ்தர்களுக்கும் ஆகிய வெள்ளைக்காரர்கள் இதைவிட அதிகமாக செய்வதை கேட்பதற்கும் ஆளில்லை. ஏனென்றால் பெரும்பாலும் இந்த பிராமணர்களே இருந்து பல ஆபாசங்களை கட்டிக்கொடுக்கிறார்கள். இம்மாதிரி நாம் எழுதுவதால், ஸ்ரீமான் வெங்கிட்டநாராயணாவோ, மற்றும் பல பிராமணரல்லாத அதிகாரிகளோ பொது சொத்தை அநுபவிக்கவேண்டும்; அதைப்பிராமணர்கள் விட்டுவிடவேண்டும் என்பது நமது அபிப்பிராயமல்ல. குரோதத்தையும், துவேஷத்தையும், பொறாமையையுமே முக்கிய காரணமாக வைத்துக்கொண்டு, அற்ப விஷயங்களில் பிரவேசித்து ஒரு மனிதன் பிராமணரல்லாதாராய் இருப்பதால் அவரைக் கெடுக்கவேண்டும் என்கிற குறியின் பேரில் செய்யும் அயோக்கியத்தனமான காரியங்களை நாம் கண்டிக்காமல் இருக்க முடியாது. அல்லாமலும், நமது பிராமணர்களுக்குக் கார்ப்பரேஷனில் கொஞ்சம் செல்வாக்கு ஏற்பட்டவுடன் ஒரு பிராமணரல்லாத அதிகாரியை—அதுவும் லஞ்சம் லாவண்யம், பொய் புரட்டு இல்லாத கண்டிப்பு வாசிப்பானவரும் கெட்டிக்காரரும் என்று, பிராமணர்களாலேயே சொல்லப்பட்டு வந்தவரான, ஒரு முக்கியஸ்தரையே—ஒழிக்கப்பார்ப்பார்களானால், இவர்கள் கைக்கு மந்திரி உத்தியோகமும் சட்டம் செய்யும் அதிகாரமும் வந்துவிட்டால், படம் ஆறு அறியாத பிராமணரல்லாத பாமர மக்களின் தலையெழுத்து என்ன ஆகும் என்பதைப் பிராமணர்கள் பின்னால் கவிபாடிக்கொண்டும், அவர்களை தலையாக்கிக்கொண்டும், பிழைக்க நினைக்கும் பிராமணரல்லாத தலைவர்களையும், தங்கள் சுயநலத்தை உத்தேசித்து, பிராமணர்களுக்கு ஆக்கம் தேடிக்கொடுக்கும் பதவி அடைய நினைக்கும் பிராமணரல்லாத சுயகாரியப்புலிகளையும், யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## மகாத்மாவின் ஓய்வு.

மகாத்மா ஓய்வு எடுத்துக் கொண்டார் என்பது உலகுக்கே தெரியும். ஆனால், அவர் ஓய்வெடுத்துக்கொண்டாலும் அவரின் பொல்லாத வேளை, என்பது அவரை ஓய்விடுவதில்லை அவரது நண்பர்கள் என்போர்கள் அவரை மறுபடியும் வழுக்கலில் சரிக்கி விட்டுக்கொண்டே வருகிறார்கள். சட்டசபையில் நம்பிக்கையில்லாததால் சுயராஜ்யக் கட்சியைத் தான் ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லி ஓய்வெடுத்துக்கொண்டவரை மறுபடி மறுபடியும் தொந்தரவு செய்து, அவர் காலைப் பிடித்து சாணியை மிதிக்கவைக்கிறார்கள். இருந்தாலும், மகாத்மா தடியும் முறியாமல் பாம்பும் சாகாமல் அடிக்கிறார். அதை விளம்பர சவுகரியக்காரர் தங்கள் சவுகரியத்திற்குத் தக்கபடி மாற்றி விளம்பரப்படுத்தி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். மகாத்மா இவ்வாரம் "யங்இந்தியாவில்" சுயராஜ்யக் கட்சியார் மதுபானத்தை விலக்குவதற்கு, முயற்சி செய்வதைத் தங்களுடைய வேலைத்திட்டத்தில் சேர்த்துக்கொண்டது பற்றி, ஏழைகளின் நண்பர்கள் பாராட்ட வேண்டும் என்றும், குடியினால் கெடுதி ஏழைகளுக்குத்தான் அதிகமென்றும், ஆனால் இதை சுயராஜ்யக் கட்சியாரே செய்யவேண்டுமென்பதில்லை; இதர கட்சியாரும் செய்யவேண்டியது என்றும் எழுதிவிட்டு ஸ்ரீமான். சி. ராஜகோபாலாச்சாரியார் சாமர்த்தியமாய் மது விலக்கைப்பற்றி எழுதியிருக்கிறார் என்றும், மது விலக்கு விஷயம் ஜனங்களுக்கு ராஜீய விஷயத்தை உண்டுபண்ண ஒரு வழி என்றும் எழுதியிருக்கிறார். இவ்வளவும் மற்றொருவருடைய கட்டாயத்திற்காக எழுதப்பட்டதாகவே தோன்றுகிறதேயல்லாமல், தானாக எழுதினதாக அதில் ஒரு வரி கூட தென்படவில்லை. அப்படி இருக்குமானால், இம்மாதிரி அவர் சொல்கிறார், இவர் செய்கிறார்; அதற்காகவும்; இதற்காகவும்; என்கிற வழ வழ எழுத்தே எழுதியிருக்கமாட்டார். அல்லாமலும், மதுபான விலக்கை சட்டசபையின் மூலம் நிறுத்திவிடலாம் என்கிற எண்ணமாவது, மதுவிலக்குக்கு சட்டசபையை உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்கிற எண்ணமாவது, அதினிடத்தில் தொனிக்காதபடி ஜாக்கிரதையாகவே எழுதியிருக்கிறார். இவைகளில் மகாத்மாவுக்கு நம்பிக்கையிருக்குமானால், அவர் தன் பழைய கதையை எழுதப்புறப்படுவாரா? மனிதன் ஓய்ந்துபோய் மேலால் ஒன்றும் செய்யமுடியாத போது தான் உட்கார்ந்து பழைய கதை பேசுவது. மற்றும் லார்ட் மார்லி போன்ற பெரிய ராஜீய தந்திரிகள் எல்லாம் தாங்கள் ஓய்ந்து போனபிறகு தான் தங்கள் தங்கள் பழைய கதை எழுத ஆரம்பித்தார்கள். ஆதலால் நமது மகாத்மா அவர்கள், தான் செய்ய வேண்டியது செய்தாய் விட்டதென்றும், இனி இவர்களிடத்தில் மேலாக ஒன்றும் செய்ய முடியாது என்றும், தீர்மானித்துக்கொண்டு தான் ஓய்வெடுத்ததாகச்சொல்லி தன் பழைய கதையை எழுதுகிறேன் என்று உட்கார்ந்து விட்டார். ஆனாலும், நமது நாட்டு பிராமணர்கள் இந்த நல்ல பேருடன் ஓய்வெடுக்க விடக்கூடாது; விட்டால், அவர் காலத்திற்குப்பிறகு அவருக்கு பெருமை நிலைத்து விடும்; ஆதலால்

அவர் இருக்கும்போதே அவர் பெருமையையும், உறுதியான எண்ணத்தையும்; எப்படியாவது ஒழித்துவிட வேண்டும், ஒரு பிராமணரல்லாத பெரியார் நம் நாட்டில் பூஜிக்கத்தகுந்தவர்; புகழத்தகுந்தவர் என்று இருக்கக்கூடாது'' என்கிற கெட்ட எண்ணம் வைத்து, மகாத்மாவுக்கு இவர்கள் செய்த நன்றிக்கு கூலி வாங்குவது போல் நினைத்தபடியெல்லாம் அவரிடம் வேலை வாங்கி அவருடைய பரிசுத்த தன்மையை கெடுக்கப் பார்க்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதாலும் கடைசியாய் இந்தியாவில் கஷ்டப்படும் ஏழைமக்களான பிராமணரல்லாதார் இதை நம்பி ஏமாறுவதாலும், அவர்கள் தலையில்தான் போய் விழுகிறது! நமக்கு புத்தியில்லாவிட்டால் யார் என்ன செய்வார்கள்?

## "தருமத்தின் மேல் தருமம்''

கோவை ஸ்ரீமான். சி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார் மகாத்மா காந்திக்கு பணமனுப்பியதாகவும், மகாத்மா பெற்றுக்கொண்டு வந்தனமனுப்பியதாகவும், பல பத்திரிக்கைகளில் வெளியாயிருந்ததும், ம[illegible] ஆ[illegible] ஒரு பெரிய தொகையாய் அதாவது நாலு ஐந்து ஆறு ஸ்தானங்கள் கொண்டதாயிருக்கலாம் என்று நினைத்ததும் ஞாபகமிருக்கலாம். ஆனால் இப்போது சரியான இடத்திலிருந்து வந்துள்ள தகவல்படி அத்தொகை [illegible] தொகையென்றும் மூன்று ஸ்தானங்கள் கொண்டதுதான் என்றும், தெரியவருகிறது. ஆயிரக்கணக்காய் கொடுத்த கனவான்களின் பெயரெல்லாம் மூடிவைக்கப்பட்டு நூற்றுக்கணக்காய் கொடுத்த கனவான்கள் பெயர் சந்து பொந்துகளிலெல்லாம் அடிபடும்படியாயிருப்பதும், அதுவும் உண்மைக்கு விரோதமாய் ஜனங்கள் நினைத்து ஏமாறும்படி இருப்பதும், பிராமணப்பத்திரிக்கைகளின் விளம்பரமும், எலக்ஷன் தந்திரமும் தானே அல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது.

இதுபோலவே ஸ்ரீமான். சி. வி. வெங்கிட்டரமண ஐயங்காரின் மற்றொரு தர்மம், அதாவது 2 லக்ஷரூபாய் தர்மம்; அதற்குக்காலும் இல்லை; தலையும் இல்லை. ஆனால் அத்தர்மத்தை துவக்க ஸ்ரீமதி. சரோஜினி வருகிறார்; ஸ்ரீமான் நேரு வருகிறார் என்று அசோசியேட்பிரஸ் முதல் அடிபடுகிறது. எலக்ஷன் தீர்ந்தவுடன், இந்த சப்தங்கள் அடங்கிப்போகும், எலக்ஷன் வேஷம் போட்டுக்கொண்டால் அதற்கு தகுந்தபடி ஆடித்தானே ஆகவேண்டும். ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரியாரே ஆடும்போது, ஐயோபாவம் ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்காரைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? இவர்கள் பேரில் குற்றம் சொல்லுவதில் பயனென்ன? இவ்விடங்களுக்கு நம்ஆள்களே திரை பிடித்து திரியவும், இதை நம்பி ஏமாறவும் தயாராயிருக்கும்போது அவர்கள் இங்ஙனம் செய்யாமல் வேறு என்ன செய்யக் கூடும்.

## காலண்டர்கள் வரவு.

1. திருப்பூர் கதர் வியாபாரம் ஸ்ரீமான். ந. க. சங்கரப்ப செட்டியார் அவர்களின் கதர் விளம்பரத்தோடு, மகாத்மா காந்தி நூல் நூற்கும் சித்திரமடங்கிய தமிழ், இங்கிலீஷ் தேதி கொண்ட ஒரு காலண்டர் வரப்பெற்றோம்.

2. திருவிடைமருதூர் யந்திர வியாபாரம் கவுதமா கம்பெனியாரின் பல யந்திரங்களின் சித்திரங்களும், விபரங்களுமடங்கியதும், தமிழ் இங்கிலீஷ் தேதிகளடங்கியதும், ஒவ்வொரு மாதத்திற்கும் தற்கால அரசியலுக்கேற்ற குறள் வாக்கியங்கள் கொண்டதுமான அழகிய பெரிய காகிதத்தில் அச்சடித்த காலண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

3. திருச்சி பெரியகடைவீதி பட்டு ஜவுளி வியாபாரம் செ. ம. நடேசம் பிள்ளை கம்பெனியாரின் பட்டு ஜவுளி வியாபார விளம்பரங்களுடன் தமிழ் இங்கிலீஷ் தேதிகளடங்கியதும், மக்கா, மதினா சித்திரங்கள் கொண்டதுமான அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

4. மதுரை ஜில்லா உசிலம்பட்டி பிஸ்கோத்து வியாபாரம் பெரி அண்ட் கம்பெனியாரின் பிஸ்கோத் விளம்பரமடங்கியதும், தமிழ் இங்கிலீஷ் தேதி ராகு காலம் முதலிய குறிப்படங்கியதுமான ஒரு அழகிய காலண்டர் வரப்பெற்றோம்.

5. திருச்சங்கோடு "தாய் நாடு'' அச்சுக் கூடத்தாரின் சிறிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

## ஸ்ரீமான். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்.

ஐயா, தயவு செய்து கீழே காணும் கேள்விகளுக்குப் பதில் அனுப்பினால் மிகவும் நன்றியறிதலுள்ளவனாக இருப்பேன்.

1. 1922—23 வருஷங்களில், தாங்கள் ஒத்துழையாதாராக இருந்தபோது கள்ளுக்கடைக்குப் போகிறீரா? காசிக்குப் போகிறீரா? என்று தாங்கள் துண்டுப் பிரசுரம் விட்ட காலத்தில், சென்னை சுயராஜ்யக்கட்சியார் கோபித்து தங்களைத் திட்டியபோது, தங்களுக்காகப் பரிந்து, திரு. வி. க. முதலியார் காசியென்பது ஒத்துழையாமை, கள்ளுக்கடையென்பது சட்டசபைப் பிரவேசம் என்று வியாக்கியானம் செய்தது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அப்படி அவர் சொல்லியது, சரிதானா? அல்லது தப்பா?

2. தங்களையே காந்தியாக மதித்து, சபாவில், உண்மைத்தலைவர் தேசபந்து அவர்களைத் துறந்த, ஸ்ரீமான்கள். சீத்தாராமய்யா, வெங்கிட்டப்பய்யா, முகம்மதலி, வல்லபாய் பட்டேல், பஜாஜ், ராமனாதன், வரதாச்சாரி இன்னும் எவ்வளவோ பேர் தங்களைப்போல் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து கொண்டார்களா? அபேட்சகராக நிற்கிறார்களா? பிரசாரம் செய்கிறார்களா? அல்லது அவர்களை ஒருங்கே நட்டாற்றில் விட்டுவிட்டீர்களா?

3. மகாத்மா காந்தியடிகளின் சிஷ்யராகச் சொல்கிற தாங்கள், பிரசாரம் செய்யப்புறப்பட்டதை பல விதமாய் ஜனங்கள் நினைக்கிறார்கள். அதாவது, அடிகளே தங்களுக்குக் கட்டளையிட்டு விட்டதாகச் சிலரும், பிராமணரல்லாதாரைத் தொலைத்துவிட்டு பிராமணர்களையே நிரப்பிவிடுவதற்காகச் சூட்சி செய்கிறார் என்று சிலரும், எதற்கும் நடுநிலையாக நின்று அபிப்பிராயங்கொடுப்பது என்று ஒரு சித்தாந்தம் சில காலமாய் நடந்து வருவதால், அப்படித்தானோ என்று சிலரும் சொல்லிக் கொள்வதால் அதையும் விளக்கி விட்டால் நன்றாயிருக்கும்.

4. அடுத்த தேர்தலில் சுயராஜ்யக் கட்சிக்காரர் ஓட்டர்களிடம்போய் காங்கிரசுக்காக ஓட் கொடுங்கள், காந்தியடிகளுக்காக ஓட் கொடுங்கள், என்று கேட்கலாமா? கூடாதா?

நமஸ்காரம்.

திருப்பதி.

## ஓ. ஓ. நவசக்தியே.

### அஞ்சற்க! அஞ்சற்க!! அந்தோ! அந்தோ!!

ஆண்டவனால் படைக்கப்பெற்ற சர்வாத்மாக்களும் சக்தியின்றி, உலகில் வாழமுடியாது. இறுதியாகக்கூறும்பக்ஷத்தில் அறம் பொருள் இன்பம் வீடு என்ற புருஷார்த்தங்களையடையக் கூட சக்தி வேண்டுமே; ஒரே சக்திக்கு இவ்வளவு மகத்துவமிருக்க ஒன்பது சக்தியையுடைய நீ ஏன் பயப்படுகிறாய்? "நாமார்க்கும் குடியல்லோம்'' என்று கர்ஜனை செய்கிறாயே! உனக்கென்ன வேண்டியிருக்கிறது? சோற்சோர்வுபடாதே! காஞ்சிபுரம் மகாநாட்டுக்கு முந்தின தினம் வரைக்கும் சுயராஜ்யக்கக்ஷியின் பேரில் உள்ள சீற்றத்தை வெளிக்காண்பிக்க ஒவ்வொரு இதழிலும், சட்டசபையைக் கட்டியழுவோர் அழுக; மற்றையோர் ஒத்துழையாமையை நடத்தவேண்டுமென்று, அழுத நீ, அப்பேனாவிலுள்ள இங்கி உலர்வதற்குள், வகுப்புவாரியைக்கட்டியழுவோரழுக; சட்டசபைக்கு வோட்டுக்கொடுங்கள், என்று அழலாந்தனையே! இது சரிதானா? தெரிந்தோ தெரியாமலோ பல நாட்களாக "பெண் புத்தி பேதமை'' என்று சொல்லுவதைப் பொய்ப்படுத்துவதற்காக சம்பாசுரனை சம்ஹரித்த கைகேயி தேவியும், மதுரைமாநகரைக்கலக்கிய உன்னைப் போல் சக்திகளல்லவா? அம்மட்டா? ராம லக்ஷமணன் போன்ற வீரமக்கள் சிறையில் கிடக்க, இத்தேசம் விடுதலை பெறும்வரை, மகர்கள் சிறை விடுதலைகோராத பீ அம்மாளும், தன் மகன் புற முதுகிட்டு யுத்தத்தில் இறந்திருப்பதால் பாலூட்டிய தனத்தை அறுத்து எறிந்த[illegible] தாயும் உன்னைப்போல சக்தியல்லவா? இன்றைக்கும் உலகத்தார் மதிக்கக்கூடிய பெசண்டம்மை; சரோஜனிதேவி, சக்திகள் தானே! இவர்கள், முன்வந்து, பெண்புத்திபேதமையென்றதைப்பொய்ப்படுத்த வரும்போது, இல்லை இல்லை என்று ரூபிக்க நீ முன்வந்தாய்போலும். அருமை நவசக்தியே! நினது சாரதி ஏர்தா[illegible] உனது ரதத்தை இலக்கைவிட்டு குறுக்கு வழியில் செலுத்துகிறார். உன்னுடைய எல்லா சக்திகளையும் அவருக்களித்து [illegible]மாய் நேர்வழி நடத்துவாயாக. காஞ்சிமகாநாட்டிற்கு முன் உன்னை யாரும் சுயராஜ்யக் கட்சியாரை வெறுத்தகூறக்காகத் தூற்றவில்லை. இப்போது அதையேன் விரும்புகிறாய்? ஆனால், உனது நண்பன், சுதேசமித்திரன் உன்னைத் தூக்கிவைத்து ஆடுகிறது உனக்கு ஒரு சமயம் இன்பமாயிருக்கலாம்; ஆனால் அவையெல்லாம் சிற்றின்பமேதவிர, அழியாத பேரின்பமாகாது. பின்னை எது பேரின்பம்? காஞ்சி மகாநாட்டிற்கு முன்னதே. திருந்து! திருந்து!! காந்தியை நினைப்பாயாக.

திருப்பதி.

## கோயமுத்தூர், வாலிப கிறிஸ்தவ சங்கத்தினரின் 1924—25—ம் வருடாந்தர அறிக்கை.

கோயமுத்தூரை அடுத்த ராமநாதபுரத்தில், வாலிப கிறிஸ்தவ சங்கத்தாரால் [வொய். எம். ஸி. ஏ.] செய்யப்பட்டுள்ள வேலைகளைக் காட்டும் 1924—25-ம் வருடத்திய அறிக்கையொன்று வரப்பெற்றோம். இச்சங்கத்தார் இராமநாதபுரத்தைச் சுற்றியுமுள்ள பிரதேசங்களில், ஆதி திராவிடர்களுக்கென அநேக ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்படுத்தியிருப்பதுடன், ஏராளமான தொகை செலவழித்து பல கைத்தொழிற்சாலைகளையும் ஸ்தாபித்து நடத்திவருகின்றனர். அங்கு பஞ்சு கொட்டவும், ராட்டையில் நூற்கவும், நெசவு செய்யவும், சாயம் போடவும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. மேலும், இச்சங்கத்தார் ஆதரவில் இராப்பாடசாலைகள் சிலதும் நடைபெறுகின்றன. இத்துடன், கோழி வளர்க்கவும், அவைகளைப்போஷிக்கும் விதம், பாதுகாக்கும் விதம் முதலியனவும் கற்றுக்கொடுக்கப்படுகின்றது. இவைகளைத்திறம்பட நடத்த ஆலோசனை சபை ஒன்றும் இருப்பதுடன், பல கௌரவ அதிகாரிகளும் இருந்து வேலை செய்கின்றனர். அறிக்கையை நோக்குமிடத்து, இச்சங்கத்தார் செய்திருக்கும் வேலைகள் மிகப்புகழத்தக்கனவாயிருக்கின்றன. இத்தகைய சங்கங்கள் பல இடங்களிலும் தோன்றவேண்டியது அவசியமாகும்.

## கலெக்டர் பங்களாவில் திருட்டு.

கோயமுத்தூர் ஜில்லாக்கலெக்டர் மிஸ்டர். ஆர். காக்ஸ். ஐ. ஸி. எஸ். பங்களாவிலிருந்து இம்மாதம் 3-ந் தேதி இரவில் ஆபீஸ் பெட்டி ஒன்று திருட்டுப்போய் விட்டதாம். பெட்டியில் கொஞ்சம் பணமும் காகிதங்களுமிருந்தனவாம். அடுத்த நாள் காலை 10 மணிக்குத்தான் பெட்டி திருட்டுப்போன விஷயம் தெரியவந்ததாம். உடனே போலீசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் வெகு உஷாராய்த் திருடனைத் தேடிப் பார்க்கிறார்கள். திருடன் இன்னும் அகப்படவில்லை என்ற கேள்வி.

## மேட்டுப்பாளையம் சத்தியமங்கலம் ரெயில்வே

சில தினங்களுக்கு முன் நடைபெற்ற கோயமுத்தூர் ஜில்லா போர்டு மீட்டிங்கில் மேட்டுப்பாளையத்திற்கும்— சத்தியமங்கலத்திற்கும் மீட்டர்கேஜ் ரெயில்வே போடவேண்டுமென ஆலோசிக்கப்பட்டதில் எஸ்டிமேட்டு தயாரிக்கவேண்டுமென தீர்மானமாயிற்று. பொள்ளாச்சிக்கும், ஆனமலைக்கும் டிராம் சர்வீஸ் ஏற்படுத்த உத்தேசித்தும் எஸ்டிமேட்டுகள் தயாரிக்கப்படுகிறதாம்.

## மதிமோச விளக்கம்.

ஸ்ரீமான். நாசி இராஜகோபாலபூபதியவர்களால் இயற்றியதும், சென்னை, பெரம்பூர் பாரக்ஸ், செல்வபதி செட்டி கம்பெனியாரால் அச்சிடப்பட்டதுமான "மதிமோச விளக்கம்" என்னும் புத்தகம் நமது பார்வைக்கு வந்தது. அப்புத்தகத்தில் பொது ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கக்கூடிய வேஷக்காரர்களும், தந்திரக்காரர்களும், பொய்யர்களும், பித்தலாட்டக்காரர்களும், எப்படி தங்களுடைய தந்திரம், புரட்டு, பொய் பித்தலாட்டம் முதலியவைகளை எப்படி ஜனங்களிடம் உபயோகப்படுத்தி வஞ்சிக்கிறார்கள், என்பதைப் பாமர ஜனங்களும் சுலபத்தில் அறியும்படியாக சுமார் 130 அத்தியாயங்களாகப் பிரித்து, அவற்றில் 130 விதத்தார்களை உதாரணமாக எடுத்துக்காட்டி, பெரிய சைசில் 225 பக்கங்களாகவும், டிடி புரட்டுகளுக்கேற்ற பல சித்திரங்களையும் கொண்டு எளிய நடையில் தெளிவாய்ப் பிரசுரித்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதை வாங்கிப்படித்தால், ஒவ்வொருவரும் உலகத்திலுள்ள சகல ஏமாற்றங்களையும் சுலபமாய் அறியலாம். இப்புத்தகத்தின் விலை புத்தகத்தின் அளவுக்கும், விஷயத்திற்கும் மிககுறைந்ததென்று சொல்லத்தகுந்த ஒரு ரூபாய்தான். ஆகையால் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்து புத்திசாலிகளாக வேண்டுமாய் விரும்புகிறோம்.

கிடைக்குமிடம்.

ஜி. செல்வபதி செட்டி அண்டு கோ

பெரம்பூர் பாரக்ஸ்,

மதராஸ்

## சந்தனக்கட்டை திருட்டுக் கேஸ்

கோயமுத்தூர் அடிஷனல் செஷன்ஸ்கோர்ட்டில், இக்கேஸ்சென்ற சில வருடங்களாக நடைபெற்றுவந்த விஷயம் நேயர்கள் அறிந்ததேயாகும். இக்கேஸ் முடிவடைந்து இம்மாதம் 8-ந் தேதி தீர்ப்புச் சொல்லப்பட்டது. 6—ந் தேதி சனிக்கிழமை இரவு 9 மணிக்கு, இந்தக் கேசில் ஜூரிகளில், மெஜாரிட்டியார், எதிரிகள் திருடவோ அல்லது திருட்டுச் சொத்தை வாங்கவோ அல்லது வாங்குவதற்கு உடந்தையாகவோ இருக்கக் கிடையாதெனத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். சந்தன மரங்களுக்குக்கெடுதி செய்ததாக அவர்கள் பேரில் ஒரு குற்றம் ஏற்பட்டது. அது விஷயமாய் ஜூரிகள் தனித்தனியாய் அசெஸ்ஸராக தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர் 4-வது அசெஸ்ஸர் மிஸ்டர். பேஷியண்டு எதிரிகளில் 1. 3, 4, பேர்தான் அந்தக்குற்றம் செய்தவர்களெனத்தெரிவித்தார். மற்றும் அசெஸ்ஸார்கள் எல்லாரும் எதிரிகள் ஒருவரும் அந்த செக்ஷன்படியும் குற்றவாளிகளல்ல என்றனர். ஆனால் செஷன்ஸ் ஜட்ஜ் ஜூரர்களின் அபிப்ராயத்தினின்றும் வேறுபட்டு, இ. பி. கோ 109, 427—வது பிரிவுகளின் கீழ் கொண்டுவரப்பட்ட குற்றங்களின்படியே, முதல், இரண்டாவது எதிரிகளுக்கு 2 வருஷக் கடுங்காவல் தண்டனையும், ரூ 5000 அபராதமும், அபராதஞ் செலுத்தத் தவறினால் 6 மாதம் கடுங்காவல் தண்டனையும், 3, 4—வது, எதிரிகளுக்கு 1½ வருடக் கடுங்காவல் தண்டனையும், 5—வது எதிரிக்கு ஒரு வருஷக் காவல் தண்டனையும் ரூ 500 அபராதமும், அபராதம் செலுத்தத் தவறினால் மூன்று மாதக் காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. இ. பி. கோ. 307—வது பிரிவின் கீழுள்ள குற்றத்தை செஷன்ஸ் ஜட்ஜ் ஹைகோர்ட்டின் ஆலோசனைக்கு அனுப்பியிருக்கிறார்.

அப்பீல் செய்து கொள்ள ஜட்ஜ்மெண்டு காபி வேண்டுமென்று எதிரிகள் கேட்டனர், மாமூல்படி கொடுக்கப்படுமென ஜட்ஜ் கூறினார்.

## கொங்கு வேளாள குல அபிமானிகளுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

சகோதரர்களே! நாளது க்ஷய வருஷம் மாசி-மீ 9-10 க்குச்சரியான 1926-ஆம் பிப்ரவரி மீ 20, 21 தேதிகளாகிய சனி ஞாயிறு இருதினங்களிலும் பொள்ளாச்சி வேளாள யூனியன் மில்லில், பாலி ஜமீன்தார் ஸ்ரீமான். பி. சின்னையகவுண்டர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மூன்றுவது கொங்கு வேளாள மகாநாடு கூடுவதாக நிச்சயித்திருக்கிறது. நமது தேசத்தில் சகலகுலத்தினர்களும் அவரவர்களுக்குத்தகுந்தபடி மகாநாடுகள் கூட்டி, அவர்கள் முன்னேற்றமடைவதை நாம் காண்கிறோம். அதுபோலவே நம் குலத்தவர்களும் இதற்கு முன் இரண்டு மகாநாடுகள் கூட்டி இருக்கிறார்கள். இப்போது மூன்றாவது மகாநாடும் கூடுகிறது. ஆகையால் இந்த மகாநாட்டுக்கும் சென்ற மகாநாடுகளுக்குச் சென்றதுபோலவே தாங்களும் தங்கள் மித்திரர்களும் விஜயம் செய்து மகாநாட்டில் தீர்மானங்களை நிறைவேற்றி, அதன்படி நடத்திவித்து நம்குலத்தை முன்னேற்றமடையச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன், என ஸ்ரீமான். கணபதி, க. சி. ஓதியப்பகவுண்டர். எழுதுகிறார்.

## ஸ்ரீ தாயுமானசுவாமிகள் 265-வது குருபூசை


### பூசை

இது சென்னை தங்கசாலைக்கு வடபாலுள்ள ஸ்ரீ யோகாநந்தாச்சிரமத்தில் நடைபெற்று வருகின்ற சமரச ஞான சங்கத்தின் 18-வது வருட நிறைவு விழாவும் ஆக, 1926-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6, 7 தேதிகளாகிய சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அதுவருமாறு:—சனிக்கிழமைகாலை 11 மணிக்கு ஸ்ரீமது பாம்பன், குமாரகுருதாச சுவாமிகளாகிய பெரியோர்கள் முன்னிலையில் ஸ்ரீ தாயுமானார் திருவுருவத்திற்கு அலங்கார ஆராதனை முதலிய பூசையும், அடியவர்களுக்கு மாகேச்சுர பூசையும் நடந்தன.

### சொற்பொழிவு.

சனிக்கிழமை மாலை 6 மணிக்குப் பேரவை தழும்பது. சமரசஞான பானு ஸ்ரீமதி. பாம்

(தொடர்ச்சி 9-வது பக்கம் பார்க்க)



# குடி அரசு.

குரோதன-௵ மாசி-மீ ௩-உ

## குறள்.

நல்லாண்மை யென்பது ஒருவருக்குத்
தான்பிறந்த-இல் ஆண்மை ஆக்கிக்கோளல்.

நாயனுர் அவர்கள் குறளில், நல்ல ஆண்மை என்பது ஒருவருக்குத் தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக் கொளல் என உரைத்திருக்கின்றதையும், அதன் கருத்து ஒருவனுக்கு ஆண்மை என்று சொல்லப்படுவது தன் குடியை உயர்த்திக் கொள்வது என்பதையும் அனைவரும் உணர்ந்திருப்பார்கள். ஆனால், நமது நாட்டில் ஆண்மைக்காகப் பாடுபடுகின்றேமென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் நல்லாண்மை ஏற்படவேண்டுமானால், வகுப்பு நலனையும், குல நலனையும் மறந்துவிடவேண்டும்; தேசத்தையே பெரிதாக நினைக்க வேண்டும்; என்று மனதார அர்த்தமில்லாத மாய வார்த்தைகளைச் சொல்லி, பாமர ஜனங்களாகிய தங்குலத்தாருக்கே துரோகம் செய்து, அவர்களைக் காட்டிக் கொடுத்து, அந்நிய குலத்தாருக்கு ஒற்றர்களாகி, அவர் பின்னால் திரிந்து வயிறு வளர்ப்பதையும், தங்களுக்கு ஆக்கந்தேடிக் கொள்ளுவதையும், நாம் பார்க்கும்போது நமது குலம் எவ்வளவு இழிவான நிலைமையில் இருக்கிறது என்பதும் விளங்கும்.

தற்கால ராஜீய உலகத்தில் எவனாவது ஒருவன் தன் வகுப்பு முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதும், மற்றும் தாழ்த்த வகுப்பு முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதும் தேசத்துரோகமெனவும், ஆண்மைத் துரோகமெனவும் மதிக்கப்பட்டுப் போகிறது. இந்நிலையும், நமது நாட்டின் பிற்பட்ட வகுப்பாருடையவும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருடையவும் ஈனஸ்திதியை விளக்குவதோடு, முற்பட்ட வகுப்பாருடையவும் உயர்ந்த வகுப்பாருடையவும் ஆதிக்கத்தையும் எடுத்துக்காட்டுகிறது. தமிழ் நாட்டில் நல்லாண்மைக்கென ஏற்பட்ட பத்திரிக்கைகள் மிகுந்திருந்தபோதிலும், அவைகள் முற்பட்ட வகுப்பாருக்கும், உயர்ந்த வகுப்பாருக்கும் பயந்து கொண்டு, வகுப்பு நலனை நாடுவதும், இல்லாண்மையாக்கிக் கொள்ளுவதும் நல்லாண்மை ஆகாதென்றும் சொல்லி, தங்கள் பத்திரிக்கைகளை நடத்தி வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட ஒவ்வொரு வகுப்பாருக்கும் தத்தம் தங்கள் ஆண்மைகளை அடையவும், நாட்டு நலன்களில் சமஉரிமை அடையவும், மார்க்கமில்லாதிருக்கும்போது, தேச உரிமையும், நாட்டு உரிமையும், யாருக்கு? வகுப்புரிமை பெற்றால் வகுப்புச்சச்சரவுகளை உண்டாக்கும் எனச்சொல்லிக்கொண்டு பல வகுப்புரிமைகளையும் நாசமாக்கி, ஒரு வகுப்பார் சகல உரிமைகளையும் அடைந்து முன்நிற்பதை மற்ற வகுப்பார் பார்த்துக்கொண்டு அவர்களுக்கு அடிமையாயிருக்கவேண்டும் என்று சொல்லுவதில் எவ்வளவு யோக்கியமிருக்கும்? நமது நாட்டில் பலவகுப்புகளிருந்தபோதிலும், ஒவ்வொரு வகுப்பையும் கவனித்து அதற்குத் தகுந்த சுயமரியாதை ஏற்பட்டிருக்கின்றதா? தேசத்திற்வரும் ஆக்கம் பல வகுப்புகளுக்கும் சரிவரப் போய்ச்சேர மார்க்கமிருக்கிறதா என்பதைக் கவனித்து, வேலை செய்தால் அது தேசத்தையே முன்னுக்குக்கொண்டுவந்ததாகும். அப்படிக்கின்றி முன்னுலிருக்கிற வகுப்பாரை மாத்திரம் கூட்டிக்கொண்டு; அவர்கள் மெச்சும்படி அவர்கள் பின்னுலும் திரிந்துகொண்டு, நாட்டுநலம், நாட்டுநலம் என்று சொல்லிக் கொண்டும், வகுப்பு நலத்தைத்தேடினால் நாடு கெட்டுப்போகும் என்றும் சொல்லிக் கொண்டு திரிந்தால், ஒருநாடு எப்படி முன்னுக்கு வரும்? ஒரு நாடு என்பது, ஒரு நாட்டிலுள்ள பல வகுப்பாரின் க்ஷேமத்தையும் பொறுத்ததா? ஒருவகுப்பாரின் க்ஷேமத்தை மாத்திரம் பொறுத்ததா? உண்மை நாட்டு நலம் தேடுவோர் தாழ்ந்த வகுப்பாருடைய நலத்தையும், பிற்பட்ட வகுப்பாருடைய நலத்தையும் தேடுவதைத்தான் நாட்டுநலமென்று நினைப்பார்கள். நாடு என்பது சகல வகுப்பாருக்குமேயொழிய, வலுத்த வகுப்பாருக்கென்று மாத்திரம் ஏற்பட்டதல்ல. "வகுப்பு நலன் [illegible] [illegible]ருல். நமது நாடு பலவகுப்புகளை [illegible] தாயிருக்கிறது, ஆதலால் பல வகுப்பாருடைய நலனையும் தேடுவதாய்ஏற்படும்; அப்போது அது முடியாத காரியமாகிவிடும், ஆதலால் நாட்டுநலம், நாட்டுநலம் என்று பொதுவாய்ச் சொல்லிக்கொண்டிருப்பது தான் அநுகூலமானது" என்று சிலர் சொல்லுகிறார்கள். நமது நாடு பல வகுப்பாரைக் கொண்டதாகவே எந்தக் காரணத்தினாலோ ஏற்பட்டுப் போய்விட்டது. பல வகுப்பாருக்கும் நம்பிக்கை உண்டாகும்படியாக நடந்து கொள்ள வேண்டியது தான் நாட்டின் நலன் தேடுவோரின் கடமை.

நாட்டு நலன் தேடுவோரின் ஒவ்வொரு திட்டமும் சகல வகுப்பாரின் நம்பிக்கைக்கும் ஏற்றதாய்த்தான் இருக்கவேண்டும். தற்போது நமது நாட்டில் வகுப்பு என்று சொல்லக் கூடிய மாதிரியில், வகுப்புரிமைக்கு ஆவலாயும், ஒன்றுக்கொன்று அவநம்பிக்கையாயும் இருப்பது மூன்றேவகுப்புத்தான் அவை-பிராமணர்-பிராமணரல்லாத இந்துக்கள்-பஞ்சமர் என்று சொல்லக்கூடிய மூன்று வகுப்பார்தான். இதை எல்லோருமே சர்க்கார் உள்பட-நாட்டு உரிமை தேடுவோர் உள்பட-எல்லோரும் ஒப்புக் கொண்டாய் விட்டது. ஆந்திரர்—தமிழர் கர்நாடகர்-கேரளர் என்கிற பிரிவைச் சொல்லி ஜனங்களை ஏய்க்கவேண்டியதில்லை. இவற்றைத்தனித்தனியாகவே பிரிக்கவேண்டுமென்று காங்கிரஸ் ஏற்பாடு செய்தாகிவிட்டது. காங்கிரசினும் அது போலவே பிரித்தாகி விட்டது. ஆதலால் அதைப் பற்றிக்கவலையில்லை. எனவே மேற்சொன்ன மூன்று வகுப்பார்தான், ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையுடனிருக்கிறார்கள். "இவர்களுக்கு உரிமை வழங்கி விட்டால், இவர்களுக்குள்ளாகவே பல வகுப்புகள் கிளம்பும்" என்று சிலர் சொல்லி ஜனங்கள் புத்தியைக்கலக்கக்கூடும். அப்படியிருந்தாலும், சகல வகுப்பாரின் நலனையும் கவனிக்கத்தகுந்த திட்டம் போடுவதற்கு முடியாதென்று பயப்படவேண்டியதில்லை. வகுப்புகளுக்குத் தகுந்தபடி உத்தியோகங்களும் ஸ்தானங்களும் அமைக்கவும், சவுகரியமிருக்கிறது. $3\frac{1}{2}$ கோடி ஜனங்களுள்ள இங்கிலாந்து பார்லிமெண்டில் 700 மெம்பர்கள் இருந்து ராஜ்யபாரம் செய்கிறார்கள். ஆதலினால் நமது நாட்டிலும் சகல வகுப்பாரையும் ராஜீயபாரத்தில் சேர்ப்பது கஷ்டமல்ல. இரட்டை முதல் வகுப்புப்படியும், 5000, 6000 ரூபாய் சம்பளமும் கொடுக்காமல், 3-வது வகுப்புப்படிச்செலவும், 400 300 சம்பளமும் கொடுத்தால் எல்லாம் சரிக்கட்டிப்போகும். அப்போது அதிகப்போட்டி இருக்காது. ஆதலால் வகுப்புரிமையைப்பற்றிப் பயப்படவேண்டியதில்லை. அல்லாமலும், நமது நாட்டில் அதிகமான பிரிவினைகள் இருக்கிறதாக நினைத்துக் கொள்ளுகின்றேமேயல்லாமல், வாஸ்தவத்தில் அவ்வளவுக்கு மிஞ்சினதாக ஒன்றுமில்லை. பிராமணர்களும் தாங்கள் ஒரு வகுப்பென்றும், தங்களைத்தவிர மற்றவர்களில் சூத்திரர்—பஞ்சமர் என இரண்டு வகுப்புகள் தான் இருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிராமணரல்லாதாரும், மேற்சொன்ன பிராமணரல்லாதார் எல்லாம் ஒரு வகுப்பென்றும், தங்களுக்கீழ் பஞ்சமர் என்று ஒரு வகுப்பும் இருப்பதாகத்தான் ஒப்புக் கொள்ளுகிறார்கள். பஞ்சமர்கள், தாங்கள் ஒருவகுப்பென்றும், மற்றவர்கள் தங்களுக்கு மேற்பட்ட வகுப்பென்றும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். இம்மூன்று வகுப்பாரும் தங்களில் ஒருவருக்கொருவர் வித்தியாசமிருப்பதாகக் கற்பித்துக்கொள்ளுவதால், இம்மூவருக்கும் தான ஒருவருக்கொருவர் நம்பிக்கையுண்டாகும்படி தக்க உரிமைகள் ஏற்படவேண்டியது மிகவும் அவசியமானதாகும் இம்மூவரும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் உயர்வு—தாழ்வு இல்லை; எல்லோரும் சமந்தான்; மனித உரிமையை அடைவதில் நாம் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர்—தாழ்ந்தவர்களல்ல; என்கிற உணர்ச்சி வருகிறகாலத்தில் வகுப்புரிமையைப்பற்றிய கவலையே வேண்டியதுமில்லை வகுப்பின்பேரால் உரிமையும் கேட்க அவசியம் ஏற்படாது. அப்படிக்கில்லாமல் பல வகுப்பாரும் சேர்ந்து கஷ்டப்பட்டு ஒரு பதவியைச் சம்பாதித்தால், அதை ஒரு வகுப்பாரே அநுபவிப்பதற்கு அநுகூலமாகவும், மற்ற வகுப்பார்கள் சூத்திரர்கள் என்றும் பிற்பட்டவரென்றும் தீண்டாதார்கள் என்றும், தெருவில் நடக்கவும்—கண்ணில் தென்படவும் அருகர்களல்லவென்றும், ஒரு வகுப்பார், ஒரு வகுப்பாரால் கருதப்படுகின்ற போது, வகுப்புரிமையைக் கவனிக்காமல் நாட்டுரிமையைக் கவனிக்கவேண்டுமென்று சொல்லுவது நல்லாண்மையல்லாததும் அர்த்தமில்லாததும், பித்தலாட்ட உரிமையாகவுமேதான் முடியும்.

# ஓட்டர்களை ஏமாற்றுதல்

ஸ்ரீமான். சி. இராஜகோபாலாச்சாரியார் முதலிய பிராமணர்களின் தந்திரம்.

சென்றசில காலமாக பிராமணரல்லாதார் பெரும்பாலும், சட்டசபைகளிலும், தாலூகா, ஜில்லா போர்டு, முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களிலும், மெஜாரிட்டியாராக ஏற்பட்டு, பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்தைக் கவனித்துக்கொண்டு வருவதில், தென்னாட்டுப் பிராமணர்கள் மனம் பொருதவராகி பொறாமையுங்கெட்ட எண்ணமுங்கொண்டு, எப்படியாவது பிராமணரல்லாதாரைச் சட்டசபைகளிலிருந்தும், ஸ்தலஸ்தாபனங்களிலிருந்தும் விரட்டியடித்து, முன்போலவே, தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும்; என்கிற எண்ணத்தின் பேரில் சகல பிரயத்தனங்களையும் செய்து வருகிறார்கள்.

பிராமணரல்லாதாரில் சில ராஜீய வாதிகளென்போர் இவற்றை நன்றாய் அறிந்திருந்தும், தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கும், வாழ்க்கை நலனுக்கும், கீர்த்திக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு பிராமணர்களின் வாலைப்பிடித்துக்கொண்டு திரிவதோடல்லாமல், பிராமணரல்லாத சமூகத்தாருக்கே கேடு சூழும்படி வாழ்ந்துவருகிறார்கள். அல்லாமலும், பிராமணரல்லாத தேசியப்பத்திரிக்கைகள் என்று சொல்லப்படும் பல பத்திரிக்கைகளும் தங்களுக்கென ஒரு கொள்கையில்லாமலும், மனிதத்தன்மையும், ஆண்மைத்தனமும் இல்லாமலும், பத்திரிக்கை நடத்துவதும், பணம் சம்பாதிப்பதும்தான் மோக்ஷ சாதனமெனக்கருதிக்கொண்டும் சமயத்திற்குத் தகுந்தபடி நடந்துகொண்டு, தங்கள் சமூக முன்னேற்றத்தைப்பாழாக்கிக்கொண்டு வருகின்றன. அன்றியும், பிராமணரல்லாதாரிலேயே, சில படித்தவர்களென்போரும், பிரபுக்களென்போரும், தங்கள் தேசத்தையும், சமூகத்தையும், மனச்சாக்ஷியையும் விற்றுவிட்டு, எப்படி நடந்து கொண்டால், சட்டசபைக்குப்போகலாம்; பதவிகள் பெறலாம்; உத்தியோகம் சம்பாதிக்கலாம், என்கிற கருத்துக்கொண்டவர்களாகி அவர்களும் சமயம் போல் நடந்து வருகிறார்கள். ஆகிய மேற்கண்டவர்களெல்லாம், இம்மாதிரி தங்கள் சுயநலத்தை மாத்திரம் கவனித்து நடப்பதால், பிராமணாதிக்கத்தை நிலை நிறுத்தப்பாடுபட்டு வரும் பிராமணர்களுக்கு மிகவும் அநுகூலம் ஏற்பட்டு, அவர்கள் வஞ்சகம் சுலபத்தில் ஈடேறும்படியாயிருந்துவருகிறது. இம்மாதிரியான காரியங்களால், பொது ஜனங்களும் இவர்கள் வஞ்சகத்தை அறிய முடியாமற்போய் விடுகிறது. இதனால் பிராமணர்களுக்கும், பிராமணரல்லாதாரை என்ன வேண்டுமானாலும் சூழ்ச்சிகள் செய்யலாம்; இதை வெளியாக்குவதற்கு மார்க்கமில்லாமல், பிராமணரல்லாத தலைவர்களென்போரையும், பத்திராசிரியர்களென்போரையும், இசைக்கட்டுக்கட்டி, அடக்கி, சுவாதீனப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறோம், என்கிற அகம்பாவத்தின் பேரில், அண்டப்புரட்டுகளும், ஆகாசப்புரட்டுகளும் புரட்டி வருகிறார்கள். சென்ற சட்டசபைத்தேர்தல்களில் முட்டுக்கட்டை போடுவதற்காகவும், ஒத்துழையாமை செய்வதற்காகவும் சட்டசபைக்குப்போகிறோம் என்று சொல்லிப்போய், தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும், இனத்தாருக்கும் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதிலேயும், அடுத்த தேர்தலிலும் சட்டசபைக்குத்தாங்களே போவதற்கு ஆக்கந்தேடிக்கொள்ளவதிலேயும் கவலையாயிருந்துவிட்டு, மறுபடியும் இவ்வருடம் மதுவிலக்கை அடியோடு ஒழித்து விடுகின்றோம் என்று சொல்வதின்பேரால், வோட்டர்களை ஏமாற்றிச் சட்டசபைக்குப் போகப்பார்க்கிறார்கள்.

இதற்கு அநுகூலமாக காங்கிரசையும உபயோகப்படுத்திக் கொள்ளுவதோடு, மகாத்மாவின் பெயரையும் உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். அல்லாமலும்; உண்மையான ஒத்துழையாதாரென்றும், யோக்கியரென்றும், சொல்லும்படியாக ஓர் காலத்தில் பொது ஜனங்களின் அபிப்பிராயம் பெற்றுவிட்ட, ஸ்ரீமான். சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும், இச்சூழ்ச்சியின் பெரும் பாகத்தைத் தானே ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறார். சென்ற சில வாரங்களாக, பிராமணர்களுக்கே வோட் கொடுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, சுயராஜ்யக் கட்சியாருக்கே வோட் கொடுங்கள்; அவர்கள் சட்டசபைகளில் கள்ளை நிறுத்துவார்கள் என்று தைரியமாய்ப்பாமர ஜனங்களை ஏமாற்றுகிறார். இதைக்கண்டு சில பாமர ஜனங்கள் ஏமாந்துபோகக் கூடுமதலால், ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியாரின் யோக்கியதையைப்பொது ஜனங்கள் அறியச் செய்யவேண்டியது நமது கடமையாகிவிட்டது. சட்டசபையைப் பற்றி சென்ற ஆண்டுக்கு முன்னாண்டில், பொது ஜனங்களிடம் நல்ல பெயர் பெற பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியார் சட்டசபை என்கிற தலைப்பின் கீழ் வெளியிட்டிருக்கும் நோட்டீஸில் கண்ட அபிப்பிராயங்களை வெளியிடுகிறோம். அதாவது:—

“இனி நடக்கப்போகும் சட்டசபைத் தேர்தல்களில் சேராமலும், எந்த அபேக்ஷகருக்கும் வாக்குக் கொடுக்காமலும், தேசபக்தர்கள் யாவரும் அபேக்ஷகர்களாக நிற்காமலும், இருக்கவேண்டியது நம்முடைய கடமை.

இதற்கு முக்கிய காரணங்களாவன.

1. சட்டசபைக்குப் போவதில் ஜனங்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாததோடு, சிறு விஷயங்களில் கவனம் செலுத்தி பெரிய விஷயங்களை மறக்கும்படி செய்துவிடும்.

2. இராணுவபலத்தாலும், தங்கள் மிருகபலத்தாலும் ஆண்டு வரும் அரசாங்கத்தார், நம்முடைய சம்மதத்தின் பேரிலும், சமாதானத்தின் பேரிலும் ஆண்டு வருவதாகச் சொல்லித்திரிய இடங்கொடுத்தவர்களாவோம்.

3. சட்டசபையைப் பகிஷ்காரம் செய்ய 1920-ம் வருடத்தில் இருந்த காரணங்கள் இப்போதும் இருந்து கொண்டு வருகின்றன.

4. அரசாங்கத்தார் சட்டசபை விஷயமாகச் செய்திருக்கும் விதிகளின்படி, அதிகாரவர்க்கத்தாருடைய செயல்களை சட்டசபை அங்கத்தினர்களால் தடுக்கமுடியவே முடியாது. சர்வ அதிகாரமும், அதிகாரவர்க்கத்தார் வைத்துக் கொண்டிருப்பதோடு, நம்முடைய பிரதிநிதிகள் அதிகாரவர்க்கத்தின் ஏமாற்றுதலுக்கும் உட்பட்டுப்போவார்கள்.

5. நாம் செய்யவேண்டிய வேலைகள், கதர்ப்பிரசாரம், தீண்டாமை யொழித்தல், ஜாதி ஒற்றுமையை வளர்த்தல் முதலிய பல வேலைகளிருக்க, இவைகளைவிட்டு வோட்டுகள் சம்பாதிக்கவும், சட்டசபைக்குள் சென்று, காலத்தையும், பணத்தையும் வீணாக்குவதும் தவறாகும்.

6. சட்டசபைக்குள் சென்று இராஜபக்தி சத்தியம் செய்வதும், சட்டசபை வேலையைச்சரிவரச் செய்வேனென்று பிரமாணம் கொடுப்பதும், நமது சுயமரியாதைக்கும், மனச்சாக்ஷிக்கும் விரோதமாகும்.

7. தற்போது அமைக்கப்பட்டிருக்கின்ற சட்டசபைகள், உபயோகமில்லையென்று உலகமே கோஷித்துக்கொண்டிருக்க நாம் அவைகளுக்குள் பிரவேசிப்பது நகைப்பிற்கிடமாகும்.

8. சட்டசபைக்குள் நமது உண்மைத்தலைவர்களெல்லாம் சென்று விட்டால், காங்கிரஸ் மகாசபைக்கிருக்கும் கௌரவமெல்லாம் குறைந்து, சட்டசபைகளுக்கு மதிப்பு வளர்ந்து, சர்க்கார் ஆட்சி நிலை பெற்று விடும்.

9. அல்லாமலும், நமக்குள் இருந்து வரும் ஜாதிச்சண்டைகளும், பொறாமைகளும் அதிகமாகும்.

10. காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளைக்கவனியாமலிருந்தால், பொறாமைக்கிடமில்லாமல் ஒற்றுமை வளரும்.”

இவ்விதமாக சுமார் 10 அபிப்பிராயங்களைச் சென்ற தேர்தலுக்குச் சொன்னவரும், இனியும் தான் ஒத்துழையாதாராகவே இருக்கிறேன் என்று சொல்பவரும், ஆன ஸ்ரீமான் ஆச்சாரியார் இவ்வாண்டு பிராமணர்களைச்சட்டசபைக்கு அநுப்புவதற்கு, முயற்சிசெய்துகொண்டு, சுயராஜ்யக்கக்ஷியின் சார்பாய் பல விளம்பரங்கள் செய்துகொண்டு வருகிறார்.

அதாவது:—

1, காங்கிரஸ் கக்ஷியார் கள்ளை ஒழிக்க உறுதிமொழி கொடுத்துவிட்டார்கள், ஆதலால் அவர்களுக்கு வோட் கொடுங்கள். என்றும்

2. கள்ளையும், சாராயத்தையும் ஒழிக்க, காங்கிரஸ் கக்ஷியார்கள், சட்டசபைக்குள் கடும்போர் புரிவார்கள், அறிந்தீர்களா? ஆதலால் அவர்களுக்கு கொடுங்களென்றும்.

3. மகா ஜனங்களே, காங்கிரஸ் கட்சியார் பூரண மதுவிலக்குக்காக பிடிவாதப்போர் நடத்துவார்கள். ஆதலால், அவர்களுக்கு வோட் கொடுங்கள் என்றும்,

4. கள்ளை நிறுத்தக் காங்கிரசின் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு அவர்களுககு வோட் கொடுங்களென்றும், இன்னும் பல இம்மாதிரி வெளிப்படையாகவும், பொருள் படும்படியாகவும் எழுதிக்கொண்டே வருகிறார். தான் போகுமிடங்களிலும், இம்மாதிரியே சுயராஜ்யக் கட்சிக்கா

ருக்கு வோட் செய்யும்படியும், பிராமணரல்லாதார்களை ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் தந்திரமாய்த் தாக்கிக்கொண்டு, அவர்களுக்கு வோட் செய்யக் கூடாதென்கிற விதமாகவும் பேசிவருகிறார்.

## ஸ்ரீமான். சத்தியமூர்த்தி.

ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியாருடைய யோக்கியதையே இப்படியிருக்குமானால், ஸ்ரீமான். சத்தியமூர்த்தியின் யோக்கியதையைப் பற்றி எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ? ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியார் கொஞ்ச நாளைக்கு முன்பு கள்ளை ஒழிப்பதாகச் சொல்லிச் சட்டசபைக்குப் போகலாம், என்று சுயராஜ்யக் கட்சியாருக்கு ஒரு யுக்தி சொல்லிக் கொடுத்த காலத்தில், ஸ்ரீமான். சத்தியமூர்த்தி ஸ்ரீமான். ஆச்சாரியார் மீது சந்தேகப்பட்டு,

(1) சட்டசபையின் மூலம் கள்ளை ஒழிக்க முடியாதென்றும்,

2. சுயராஜ்யம் வந்தாலொழிய கள்ளை ஒழிக்க முடியாதென்றும்,

3. 25 வருடத்தில் கள்ளை ஒழிக்க ஒரு திட்டம் போடவேண்டுமென்றும்,

4. சட்டசபையின் மூலம் ஒரு காரியமும் செய்ய முடியாதென்று அரசியல் கமிட்டி முன் சாட்சியங் கொடுத்தும்,

5 ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியாரே கலால் இலாகா மந்திரியாய் வந்தாலும்கூட, கள்ளை நிறுத்திவிட முடியாதென்றும்,

6. ஆகலால், ஸ்ரீமான். ஆச்சாரியார் சொல்லுவது நடவாதகாரியமென்றும், இதில் ஏதோ [illegible] இருக்கின்றது என்று பத்திரிகையில் சொல்லிக்கொண்டிருந்த ஸ்ரீமான். சத்தியமூர்த்தி, தன்னை மந்திரியாய் நியமித்தால் உடனே கள்ளை நிறுத்திவிடுவேனென்னச் சொல்லுவதும், கள்ளை நிறுத்தப் பாடுபடுவதாய் ஸ்ரீமான். ஆச்சாரியாருக்கு உறுதி கூறியிருப்பதாகச் சொல்லுவதும், ஸ்ரீமான். ஆச்சாரியாரும், இம்மாதிரியான ஆள்களுக்கு வோட் வாங்கிக்கொடுக்கப் போது ஜனங்களை வஞ்சிப்பதும், எவ்வளவு யோக்கியமான காரியமென்பதை வாசகர்கள் தான் கவனிக்க வேண்டும்.

இதைக் கவனிக்கின்றபோது சந்தைக் கடைகளில் மாட்டுத் தரகர்கள் செய்யும் பித்தலாட்டங்கள் நமது ஞாபகத்திற்கு வருகின்றது.

## மாட்டுக்கடைப் பித்தலாட்டம்.

சந்தைக் கடைகளில் சிலர் தங்களுடைய உபயோகமற்ற மாடுகளை வயிறு நிறையத் தண்ணீரை நிரப்பிக்கொண்டுவந்து விற்பதற்காகக் கொண்டு வருவார்கள். அவ்விடங்களில் விற்றுக்கொடுப்பதற்காகத் தரகர்கள் இருப்பார்கள். அவர்களில் இருவர், அம்மாட்டுக்காரர்களிடம் இரகசியமாக நல்ல விலைக்கு விற்றுக் கொடுத்தால் தங்களுக்கு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்றும், அப்படிக்கில்லாவிட்டால், மாட்டினுடைய யோக்கியதையை வெளியிற் சொல்லிவிடுவோமென்றும் சொல்லி, அவனிடம் ஒப்பந்தமாகப் பேசிக்கொண்டு, தாங்கள் மாட்டை விற்றுக்கொடுப்பதற்குப் பிரயத்தனப்படுவார்கள். அப்பொழுது தரகர்கள் இருவருமே, ஒருவன் மாட்டுக்காரனாகவும், மற்றொருவன் மாடு வாங்குகிறவனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு, உண்மையாய் மாடு வாங்குகிறவர்கள் யாராவது அவ்வழியாகப் போகும்போது, மாட்டின் ஆசனத்தின் வழியாய் மாட்டுத்தினசு என்கிற பூச்சியை உள்ளே செலுத்தி அம்மாட்டைக் குதிக்கச் செய்துகொண்டு, ஒருவருக்கொருவர் விலை பேசுவதுபோல் பேசிக் கொண்டிருப்பார்கள். உண்மையாய் மாடுவாங்குகிறவன் இதை வாஸ்தவமென்று நினைத்து, மாடு தினசு குடைவதைப் பொறுக்கமாட்டாமல் அங்குமிங்கும் தாவிக்குதிப்பதைக் கண்டு, இது மிகவும் சுறுசுறுப்பான மாடு என்று நினைத்துக்கொண்டு, சமீபத்தில் வந்தால், தரகர்கள் ஒருவருக்கொருவர் அது 20 ரூபாய் பெறாத மாடாயிருந்தபோதிலும், இவன் 60 ரூபாய்க்குக் கேட்பது போல் கேட்பதும், அவன் 100 ரூபாய்க்குக் குறைந்து கொடுக்கமாட்டேனென்று சொல்லுவதும், மற்றவன் அது 6 மாதத்திற்கு முன்னேயல்லவா, 100 ரூபாய் விலை இருந்தது, இப்பொழுது விலை இறங்கிவிட்டது; இந்த 60 ரூபாய்தான் பெறும், அதற்கு மேல் முடியாது எனப் பேசிக்கொண்டிருப்பதும், உண்மையாய் வாங்குகிறவன், மாட்டைத் தொட்டுப் பார்க்க வந்தால் 60 ரூபாய்க்குக் கேட்கிறதுபோல் நடித்த தரகன், அது விற்கிற மாடல்ல; 60 ரூபாய்க்கு நான் முன்னமே வாங்கியாகிவிட்டது; போமய்யா போம என்று சொல்லுவதும், மாட்டுக்காரன் போல் நடித்தவன் இல்லையா அது 100 ரூபாய் மாடு, நான் 60 ரூபாய்க்குக் கொடுக்கமாட்டேன், அவர் கிடக்கிறார்; நீங்கள் வேண்டுமானால் பாருங்கள் என்று சொல்லுவதும், மாடு வாங்க வந்தவன் இவர்கள் நடிப்பதைப் பார்த்து உண்மைதானென நம்பி ஏமாந்து, மாடு தினசு குடைச்சல் பொறுக்கமாட்டாமல் குதிப்பதைப் பார்த்து, சுறுசுறுப்பான மாடென்றும். இவர்கள் விலை கேட்பதைப் பார்த்து, உண்மையாயிருக்குமென்றும் நம்பியும், பின்னும் விடயதாப் நடிக்கும் தரகன், வாங்குகின்றவனைப் பார்த்து, இந்த மாடு சரியாய் வேலை செய்யாவிட்டால் கொண்டுவந்து விட்டுவிடுங்கள்; தீனிச் செலவு, வட்டியெல்லாம் சேர்த்துக் கொடுத்துவிடுகிறேன், என்று சொல்லும் வஞ்சக வாக்குறுதிகளையும் நம்பி வாங்கிவிடுவான். அவன் வாங்கிவிட்டதும், பணத்தை மூவருமாகச் சேர்ந்து பங்குபோட்டுக்கொண்டு, சப்பை மாட்டை அவன் தலையில் கட்டிவிட்டு ஓடிப்போவார்கள்.

பிறகு மாடு வாங்கினவன் வீடு கொண்டு போய்ச் சேர்ப்பதே பெரிய கஷ்டமாய்ப் போய்விடும். தினசு செத்துக் குடைச்சல் நின்றுபோனதற்கப்புறம், மாடு மூத்திரம் பெய்யவும், சாணி போடவும்கூட எழுந்து நிற்பதற்குச் சக்தியில்லாமல் படுக்கையிலேயே இவைகள் கழிக்கவேண்டியதாக இருக்கும்.

அதுபோல, நமது சப்பை மாட்டுக்காரனாகிய சர்க்காருக்கு விற்றுக் கொடுப்பவர்களாகிய ஸ்ரீமான்கள். இராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்திபோன்ற தரகர்கள், மாடு வாங்கும் குடியானவர்களாகிய, பிராமணரல்லாத பாமர வோட்டர் ஜனங்கள் தலையில் சப்பை மாட்டைக் கட்டுவதுபோல் அவர்கள் ஓட்டை வாங்கி தாங்கள் சட்டசபைக்குப்போய், விலையைப் பங்குபோட்டுக் கொள்ளுவதுபோல், தாங்களும், தங்கள் பிள்ளை குட்டிகளும், இனத்தார்களும் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டு, மாடு வாங்கினவன் அதிக விலைபோட்டு வாங்கி சப்பை மாட்டைக்கட்டி அழுவதுபோல், பிராமணரல்லாதார்கள் தாழ்ந்த நிலையில் தீண்டாதவர்களைப்போல் அவஸ்தைப்படுவது, இம்மாதிரி சம்பவங்களுக்குப்பொருத்தமானதென்று எடுத்துக் காட்டத்தேவையில்லை.

---

## சுசீந்திரம் சத்தியாக்கிரகம்.

சென்ற ஜனவரி-மீ 30-ந் தேதியன்று ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சுசீந்திரத்திற்கு விஜயம் செய்தனர். அவர் சத்தியாக்கிரகம் நடக்குமிடத்திற்கு ஸ்ரீமான். டாக்டர் எம். ஈ. நாயுடுவுடன் வந்து, ஆலயத்தைச்சுற்றியுள்ள ரஸ்தாக்களையெல்லாம் பார்வையிட்டார். மாலையில் ஓர் பெரிய மகாநாடு ஆற்றங்கரையோரமாக உள்ள பெரிய இடத்தில் கூட்டப்பெற்றது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஜனங்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீமான். எம். சிவதாணு பிள்ளை அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான். நாயக்கர் பேசுகையில், தமிழ் நாட்டிலுள்ள எல்லா இடத்தைப்பார்க்கிலும் கோட்டாறு கதர் விலை மலிவானதாகவும், நல்ல நிறமாகவும் இருப்பது பற்றி தாம் மிகவும் பாராட்டுவதுடன், வைக்கம் சத்தியாக்கிரகத்திற்குப்பிறகு, சத்தியாக்கிரகிகளைக் கவர்ன்மெண்டார் தீவிரமாக ஆதரிக்காமல் கோழைத்தனம் காட்டிவருவதாகக் கூறினார். மேலும் இச்சத்தியாக்கிரகம் நடைபெறவேண்டியது அவசியமென்றும், தமிழ் நாட்டார் இதனை ஆதரிக்கத் தயாராயிருப்பதாகவும் சொன்னார். சில காலிகள்—எதிர்க்கக்ஷியைச்சேர்ந்தவர்கள் மகாநாடு நடைபெறும் போது கலகம் விளைவித்துக்கொண்டேயிருந்தனர். எதிர்கக்ஷியினராக விளங்குபவர்களெல்லாம், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும் வைதீக கோஷ்டியாருமே தான்.

போலீஸ் சூப்பரின்டெண்டு, அஸிஸ்டெண்டு, சூப்பிரன்டெண்டெண்டு, போலீஸ் இன்ஸ்பெக்டர், முதலானவர்கள் சுசீந்திரத்திற்கு வந்திருக்கின்றனர். எதிர்க் கக்ஷி தலைவர்களுக்கு, போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு பேட்டி கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தார்.

பெப்ரவரி மீ 3—ந் தேதி பந்தலுக்குப் பக்கம் வேலியும் போடப்பட்டது. இப்பந்தலைப்பற்றி என்ஜினீரிங் இலாகாவிற்கும் ரெவினியூ இலாகாவிற்கும் சச்சரவு இருந்து இருந்து வருகிறது. உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர், ஸ்ரீமான். தம்பி, சத்தியாக்கிரகிகளின் தலைவரான சவாணமுத்துச்சாமியைப் பார்த்து, கோயிற்தெருக்களுக்குள் சந்துகள் மூலம் பிரவேசிப்பது சரியாக இல்லை என்று கூறினாராம். எதிரிதரப்பினர் வெறுக்கத்தகுந்த முறையில் இழிவான சொற்களை உபயோகிக்கின்றார்கள். மூகமது இப்ராஹீம் செனோவ்ஷடா என்பவர் கதர் ஆடையையும், குல்லாயையும் அணிந்து சென்றதால் தெருவில் செல்ல 2 தினங்களாக அநுமதிக்கப்படவில்லை. சத்தியாக்கிரகத்தை நடத்த கோவைமகாஜனக் காங்கிரஸ் கமிட்டியாரும், தமிழ்நாடு மகாஜன காங்கிரஸ் கமிட்டியாரும் உதவி செய்யவேண்டுமென சத்தியாக்கிரக கமிட்டியார் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

(௫-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

பன், குமாரகுருதாச சுவாமிகள் "குமாரனும், குருத்துவமும்" என்ற பொருள்பற்றி ஒப்பற்ற விரிவுரை புரிந்தார்கள். அதை யாவரும் பொன்னே போல்போற்றி, மனத்திலிருத்திப் பழகிப்பயன் பெறுதற் கேதுவாகிய உபதேசவடிவாகவிருந்தது. யாவரும் எக்காரியஞ்செய்தல் பாவ விமோசன மாகுமென்பதைத் தெள்ளிதினுணர்ந்து சித்தம் பூரித்தார்கள். முதலிலும் ஸ்ரீலஸ்ரீ சண்முகானந்த சுவாமிகள் சிற்சில வார்த்தைகள் புகன்று அவையோரை மகிழ்வித்தார்கள். கர்ப்பூரசோதி காட்டி விபூதி முதலியவுதவிய பின் மங்கலமுற்றது.

### ஞாயிற்றுக்கிழமை.

மாலை 4-மணிக்குச் சபை கூடியது. டாக்டர். குருசாமி முதலியார் வரவியலாமையால் திருவாளர் மார்த்தாண்டம் பிள்ளையவர்கள் பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவைத்தலைமை பூணவும் உயர்திரு ஷண்முகானந்த சுவாமிகள் 'தமிழும் வைத்தியமும்" என்ற பொருள்பற்றி யாவருள்ளமும் வியப்புற்று புதியவுணர்வு தோன்றுமாறு தமிழின் தொன்மையும் அதன் நட்பொருள்களும் அதை இலக்கணகாலத்திற்கு முன்னமே, சித்தர்களால் வைத்திய நூற்கள் செய்யப்பட்டதென்றும் தென்னாட்டு மக்கள் உடலமைப்புக்கும் உணவின் மதாரத்திற்கும் வெப்பதட்பங்களுக்கும் பொருத்தமாயது தமிழ் வைத்தியமென்றும் மிகவிரிவாகப்பேசினார்கள். தலைவர் முடிப்புரையுடன் முடிவுற்றது.

### மற்றும்

6-மணிக்கு கனம் சர். டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள் (அமைச்சர்) தலைவராயமர்ந்து முன் மொழிந்திருந்தார். திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் எம். ஏ. எம். எல். "சமயங்களின் உட்கருத்து" என்ற பொருள் பற்றி மிகவிளக்கமாகவும் விரிவாகவும் பேசி மகிழ்வித்தார்கள். மற்றும் திருவாளர் தணிகாசல முதலியார் பி. ஏ. பி. எல். ஹைகோர்ட்டு வக்கீல் அவர்களாலும், திருவாளர் சோமசுந்தர முதலியார் அவர்களாலும் சில பேசியபின், தலைவர் முடிப்புரையுடன், சபை வணக்கமும் நன்றியறிதலும் கூறியபின், திருநீறும், பிறவும் வழங்க இனிது நிறைவேறியது.

ஓர் தமிழன்.

## பிழை திருத்தம்.

நமது "குடி அரசு" 31—1—26 பத்திரிக்கை (மலர் 39)—யின் 11—வது பக்கம் 3-வது பத்தியில், "ஏலம்" என்ற தலைப்பின் கீழ், நீலத்தநல்லூரில் கால்நடைச் சந்தை என்ற விளம்பரத்தில், 1926—ம் வருடம் பிப்ரவரி௴ 1—ந் தேதிக்குப் பதிலாக பிப்ரவரி௴ 12—ந் தேதி என தவறுதலாக பிரசுரமாகிவிட்டதுபற்றி விசனிக்கிறோம்.

(ப—ர்)

## கோயமுத்தூர் ஜில்லா ஆயுர்வேத முதலாவது மகா நாடும் கண்காக்ஷியும்.

கோயமுத்தூர் ஜில்லா, ஆயுர்வேத முதலாவது மகாநாடு, இம்மாதம் 19—ந் தேதி வெள்ளிக்கிழமை நடைபெறும். அவ்வமயம் ஸ்ரீமான். வைத்யரத்ன. ஆர். பார்த்தசாஸ்திரிகள் அக்ராசனம் வகிப்பார். அதே நாளில், கனியூர், மிராஸ்தாரரான ஸ்ரீமான். பிரம்மஸ்ரீ கே. வெங்கிட்டகிருஷ்ணையர் ஆயுர்வேத கண்காக்ஷி சாலையைத் திறந்து வைப்பார்.

## பிரசாரக் கூட்டங்களில் குழப்பம்.

தற்காலம் சுயராஜ்யக் கக்ஷிப்பிரசாரத்திற்காக ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்கார், கலியாணசுந்தர முதலியார், முதலியோர்கள் ஆங்காங்கு செல்லுவதும் சட்டசபை அபேக்ஷகர்களைத் தங்கள் கக்ஷிக்கு இழுப்பதுமான பிரசாரங்கள் நடந்துவருவதைப் பத்திரிக்கை வாயிலாக அறிகிறோம். அதோடு கூடவே ஒவ்வொரு கூட்டங்களிலும் குழப்பங்களும், கூச்சல்களும் நடப்பதும் பார்க்கிறோம். உதாரணமாக மதுரையில் மீட்டிங்கு நடக்கவிடாமற் செய்ததும், கும்பகோணத்தில் போலீஸ் உதவியினால், தலைவர்கள் என்போர் விரும்ப யச்சேர்ந்ததும், காஞ்சிபுரத்தில் கேள்விகளும், குழப்பங்களும் நடந்ததும் பத்திரிக்கைகள் மூலமாகவும், நிருபர்கள் மூலமாகவும் தெரியவருகிறது. இம்மாதிரியான காரியங்களை நாம் மனப்பூர்த்தியாக வெறுக்கிறோம். பிரசாரகர்கள் என்ன கருத்தோடு வந்தபோதிலும் அவர்கள் சொல்வது முழுமையும் பொறுமையாய்க் கேட்டுவிட்டு மறுப்பு ஏதாவது இருந்தால் பேசுவதற்கு அவகாசம் கேட்கவேண்டியது. அக்கூட்டத்தார் அதை மறுப்பார்களானால், பேசாமலிருந்துவிட்டு அடுத்தகாள் ஒரு கூட்டத்தைக்கூட்டி தமது அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டுமேயல்லாமல், குழப்பம் செய்வதோ, பேசமுடியாமற் தடுப்பதோ, போலீஸ் தயவைக்கொண்டு வீடுபோகச்செய்வதோ, சிறிதும் நீதியான காரியமென்றே சொல் [illegible]

இம்மாதம் 21—ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று, உடுமலைப்பேட்டையில், அமராவதி ஆயுர்வேத வைத்தியசாலையை, கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு, ஸ்ரீமான் சி. எஸ். ரத்னசபாபதி முதலியார் அவர்கள் திறந்து வைப்பார். ஆயுர்வேத வைத்தியத்தைப்பற்றிப் பலர் உபந்யாசம் செய்வார்கள் என, வரவேற்புக் கமிட்டி தலைவர் ஸ்ரீமான். ஆர். சதாசிவம் பிள்ளை தெரிவிக்கிறார்.

## சூரம்பட்டி

ஈரோட்டுக்கு அருகாமையிலுள்ள சூரம்பட்டி என்னும் கிராமத்தில் 12-2-26 வெள்ளிக்கிழமை மாலை சேலம் ஸ்ரீமான் ம. பழனிச்சாமிப் பண்டாரம் தலைமையின் கீழ், கொல்லத்து வேலைக்காரர்களின் மகாநாடொன்று கூடிற்று. சுமார் 200 கொல்லத்து வேலைக்காரர்கள்வரை விஜயம் செய்திருந்தார்கள். அதுசமயம் கொல்லத்து சங்கத்துக்காரரின் பிரசிடெண்டாகிய ஸ்ரீமான். கே. வி. சாமியப்ப நாயக்கரால் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கு ஓர் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்ததல்லாமல், கொல்லத்துக்காரர் முன்னேற்றத்தைப் பற்றியும், சில புத்திமதிகள் சொல்லும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதுபோலவே, ஸ்ரீமான். நாயக்கர், தொழிலாளிகளின் நாணயத்தைப்பற்றியும், கதர், மதுவிலக்கு இவைகளைப் பற்றியும் மனதில் பதியும்படியான ஓர் உபந்யாசம் செய்தார். அக்ராசனராகிய ஸ்ரீமான். பண்டாரம் அவர்கள் தீண்டாமையைப்பற்றியும், சங்கத்தின் நடபடிக்கைகளைப்பற்றியும், முடிவுரையாகச் சிறிது நேரம் பேசி, மற்றும் கொல்லத்துக்காரர்களின் கூலி, வேலை நேரம் முதலியவைகளைப் பற்றியும், ஒற்றுமையைப் பற்றியும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டபின், வந்திருந்தவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டு கூட்டம் முடிவு பெற்றது.

## பிராமணர்கள் மாமிசம் உண்பது.

தென்னாட்டுப் பிராமணர் ஒருவர், தீண்டாமையை ஒழிப்பது நியாயமல்லவென்றும், தீண்டாதார்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள், மீன் பிடிக்கிறார்கள், தூய்மையற்றவர்கள், ஆதலால், அவர்களைத் தெருவில் விடுவதும் தப்பென்று மகாத்மா காந்தி அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலாக தமது "யங் இந்தியா"வில் எழுதுவதின் சாராம்சம்:—

'இந்நிருபர் சொல்லுவதில் உள்ள தவறுகளை எடுத்துக் காட்டவேண்டியது எனது கடமை. முதலாவது பிராமணர்கள் மாமிசம் சாப்பிடவில்லையென்று சொல்லுவது, தென்னாட்டைப் பொறுத்தவரையில் உண்மையாவதானாலும், மற்ற இடங்களில் பிராமணர்கள் மீன் சாப்பிடுவதோடு, வங்காளம், காஷ்மீரம் முதலிய இடங்களில் உள்ள பிராமணர்கள் மாமிசமும் சாப்பிடுகிறார்கள். அல்லாமலும், தென்னாட்டில் மாமிசம் சாப்பிடுபவர்கள் அனைவரும், மீன் தின்பவர்கள் அனைவரும் நெருங்கப்படாதவர்கள் [illegible] தீண்டப்படாதவர் குலத்தில் பிறந்திருந்தாலும் [illegible] தூய்மையாயிருக்கப்பட்டவர்களைத் தீண்டாதவர்களென்றே கருதுகிறார்கள். மாமிசம் தின்னும் பிராமணரல்லாதார் அதிக [illegible] த்தவர்களாயிருந்தால், அவர் [illegible] பிராமணர்கள் நெருங்கிப் பழகவில்லையா? இறைச்சி தின்னும் இந்து அரசர்களுக்குப் பிராமணர்கள் தலை வணங்குவதில்லையா? இந்நிருபர் போன்றவர்கள், தங்களுடைய பேராசையினால் தாங்கள் சொல்லுவது இன்னதென்பதே அறியாமல், அழியப்போகும் வழக்கத்தை நிலை நிறுத்தப் பார்ப்பது ஆச்சரியமாய் இருக்கிறது. தாம் நினைக்கும் தூய்மையென்ற ஒன்றை நிலை நிறுத்துவதால், லக்ஷக்கணக்கான மக்களுக்கு கொடுமை விளைவிப்பதை இவர் கவனிக்கவேயில்லை. மாமிசம் சாப்பிடுவதினால் அவரைத் தொடக்கூடாது என்று சொல்லுவது கொஞ்சமும் அறிவுடைமையாகாது. மாமிசம் சாப்பிடக்கூடாதென்பதை நான் பாராட்டுகிறேன். மாமிசம் சாப்பிடாத பிராமணர்களைப் பற்றியும், தூய்மையான வாழ்க்கையுள்ள பிராமணர்களைப் பற்றியும், அவர்கள் அபிவிருத்தியடைந்திருப்பது பற்றியும், எனக்குத் தெரியும். அவர்கள் உயர்ந்த நிலையிலிருக்கும் போது தங்கள் நிலையைப் பாதுகாக்க இவ்வளவு கஷ்டப்படவில்லை. உண்மையில்லாத ஒழுக்கம், தங்கள் பலத்தை இழந்து விடத்தான் செய்யும். இந்தப் பிராமணர் வேண்டியவாறு தங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்பது இக்காலத்தில் முடியாத காரியம். இத்தகைய பாதுகாப்பை விரும்பாதவர்களும், சீர்திருத்தத்தில் கவலையுள்ளவர்களுமாகிய பிராமணர்களின் தொகை அதிகரித்து வருகின்றது. இதனால் சீக்கிரத்தில் இக்குருட்டு நம்பிக்கையும், பேராசையும் சீக்கிரத்தில் ஒழிந்துவிடுமென்றே நம்புகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்கும், என்னால் கூடிய அளவு ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தவறவிடாமல் அவர்கள் தூய்மைக்காகப் பாடுபட்டே வந்திருக்கிறேன்; அவர்களும் கூடியவரையில் திருப்திகரமாகவே நடந்து வருகிறார்கள்.'

## “தீனபந்து” என்னும் பத்திரிகை வீண்பழி என்னும் தலைப்பின்கீழ் எழுதுவதாவது:—

இந்நாளில் உண்மைக்கு மாறாய் பல விஷயங்கள் பத்திரிக்கையில் வெளி வந்து விடுகின்றது. அதைப் பாமர ஜனங்கள் உண்மையென்றே மதிக்கின்றார்கள். கட்சி துவேஷமும் ஜாதி பூசலும் கொழுந்து விட்டெரியும் இவ்வேளையில் எதை நம்புவது எதைத்தள்ளுவது என்று ஒருவரும் சிந்திப்பதில்லை. பழுத்த தேசாபிமானமும், விசால நோக்கமுமுள்ள கனவான்களே யோசியாமல் தன் மனம்போனவாறு பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் கொள்ளுகின்றார்கள். எதையும் கவனித்து கொஞ்சகாலம் நிதானித்து உண்மையை அறிய வேண்டியதுதான் அறிவுடையோர் கடமை. சில மாதங்களாக ஸ்ரீமான். ஈ. வெ ராமசாமி நாய்க்கரின் பேரில் அபாண்டமான பழிகளும், வீண் வதந்திகளும் கட்டிவிட்டு பலர் சந்தோஷப்படுகிறார்கள்; இதை நான் ஊன்றி கவனித்துவருகிறேன். ஸ்ரீமான். நாயக்கரின் தேசாபிமானமும், சுயநலமற்ற தியாகமும், தமிழ் நாட்டில் யார்தான் அறியமாட்டார்கள். தமிழ்நாட்டுத்தலைவர்களின் போக்கே வேறே மாதிரி திரும்பியிருக்கிறது. போகப்போக எல்லாம் தெரியும். சென்ற ஜனவரி-மீ 22உ வெளிவந்த சுதேசமித்திரன் சட்டசபை தேர்தல் என்ற உபதலையங்கத்தில் வட ஆற்காடு ஜில்லாவின் சார்பாக சட்டசபைக்கு அபேக்ஷகராக நிற்கும் சுயராஜ்யக்கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான். வெங்கடரங்கம் நாயுடுவைப் புகழ்ந்து எழுதிவிட்டு ஜஸ்டிஸ் கட்சி சார்பாக நிற்கும் ஸ்ரீமான். வேலூர் வக்கீல் பத்மநாப முதலியார் இது வரையில் பொது ஜனங்களுக்கு உழைக்கவில்லையென்று மதிப்புரை எழுதியிருக்கிறது. ஸ்ரீமான் பத்மநாப முதலியாரை மித்திரன் நன்கு அறியமாட்டான். அவர் வேலூர் முனிசிபாலிட்டியில் பிரஜைகளுக்குப் பல விதங்களில் ஊழியம் புரிந்து வருகிறார். எலெக்ஷன் காலங்களில் வேலூர் மகாஜனங்கள் ஸ்ரீமான். முதலியாரைப் பிரீதியாய் தேர்ந்தெடுப்பதிலிருந்தே அவரை வேலூர் வாசிகள் எப்படி மதிக்கிறார்கள் என்பதை வெகு தூரத்திலிருப்பவர்கள் அறியமாட்டார்கள். அவர் டாம்பீகமின்றி தேச ஊழியம் செய்து வருகிறார். வயதில் சிறியவராயினும் தேச பக்தியில் பெரியவரே. மனச்சாக்ஷியை விற்கமாட்டார்; வேலூர்பிராமண வக்கீல்களே அவர் குணாதிசயங்களை புகழ்ந்திருக்கிறார்கள். கக்ஷி துவேஷத்தினால் எதிர் கக்ஷியிலுள்ள கண்ணியமானவர்களைக் குறைகூறப்படாது. தேசிய இயக்கத்தில் சேர்ந்திருப்பதற்காக இல்லாத விசேஷ குணங்களை யெடுத்துச் சொல்வது அழகல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். சென்ற ஜனவரி மீ 23உ வெள்ளி வந்த “தேசபந்து” என்ற சென்னை பத்திரிகை தன்னுடைய குறிப்பில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஸ்ரீமான். வெங்கடரங்கம நாயுடுவுக்கு எதிர்ப்பிரசாரம் செய்யப் போகிறாரென்றும் இப்பொழுது வட ஆற்காடு ஜில்லா தொகுதிக்கு அபேக்ஷகராக நிற்கும் ஸ்ரீமான் நாயுடு பிராமணரா பிராமணரல்லாதாரா? இப்பொழுது பிராமணரல்லாதாரையே ஸ்ரீமான். நாயக்கர் எதிர்க்கப் புறப்படுகிறார். வாக்காளர்கள் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறது. ஸ்ரீமான். ஈ வெ. ராமசாமி நாயக்கர் இந்த உபதேர்தலில் என்ன அபிப்ராயப்பட்டிருக்கிறார் என்பதை நான் அறிவேன். அவர் ஸ்ரீமான் வெங்கடரங்கம் நாயுடுவை எதிர்க்கப் பிரியப்படவில்லை. இந்த உபதேர்தலில் ஸ்ரீமான் பத்மநாப முதலியார் நிற்பதையே அவர் விரும்பவில்லை, இதை நான் நன்கு அறிவேன், உண்மை விஷயம் இப்படியிருக்க, ஸ்ரீமான். நாயக்கரின் பேரில் அபாண்டமான பழிகளைச்சுமத்துவது உசிதமாயில்லை. ஒற்றுமை வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வேற்றுமை கிளப்புவது தேச சேவையாகமாட்டாது. ஸ்ரீமான் நாய்க்கருக்காக நான் வக்காலத்து வாங்கிப்பேசவில்லை, உண்மையை நான் அறிந்திருப்பதால் எழுத முன்வந்தேன். உண்மையை மறைத்து எழுதுவது காலக்கொடுமையே!

---

## சென்னிமலை இரதோத்ஸவமும் குருக்கள்களின் அதிக்கிரமங்களும்,

சென்னிமலை ஸ்ரீ. தண்டபாணி ஸ்வாமி தேவஸ்தானம் கொங்குநாட்டின் பல முக்கிய ஸ்தலங்களில் ஒன்று. வருஷந்தோறும் இரதோத்ஸவ காலத்தில் ஆயிரக்கணக்கான பக்திமான்கள் கூடும் ஸ்தலம். வழக்கப்படி இவ்வருஷத்திய இரதோத்ஸவம், சென்ற 20—1—26முதல் தொடங்கி (2—2—26)-ல் முடிவு பெற்றது. இந்த உத்ஸவத்தின் ஐந்தாவது தினத்தன்று வெள்ளிமயில் வாகனக் காட்சி! இத்திருநாளானது மகா-ள-ள-ஸ்ரீ எல்ம்பள்ளி ஜமீன்தார் அவர்களுக்கு வம்சபாரம்பரியமாக குலதெய்வமாகையால் இதை வெகு விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வருஷம் இம்மயில் வாகனத் திருநாள் காட்சிக்கு ஜமீன்தாரவர்களால் ரோஜாபுஷ்பஎலக்ட்ரிக் விளக்குகள் கொண்டு சுவாமிக்கு அலங்கரிப்பதன் பொருட்டு, புஷ்பமாலைகளுடன் அளிக்கப்பட்டது. அவ்விளக்குகளை சுவாமியின்மேல்வைத்து அலங்கரிக்கப்பட்டது. பிறகு சிறிதுநேரத்துக்கப்பால் யாதும்காரணம் கூறாமல் முதலில் சாத்திய குருக்கள் எவரோ, அவரே அந்த விளக்குகளை சுவாமியின்மேலிருந்து எடுத்து விட்டார். இவ்விதம் செய்ததின் காரணம் யாதென ஜமீன்தாருடைய சிப்பந்திகள் கேட்க, அதற்கு அவர் இவ்விதம் எலக்ட்ரிக் விளக்குகள் சுவாமியின்மேல் சாத்துவது ஆகமங்களுக்கு முற்றிலும் விரோதமென்றும், அப்படிச் சாத்தினால் சுவாமிக்குக் குற்றமென்றும், இன்னும் வசி அர்த்தமில்லாத பதிலுரைத்தனர். தவிர, இதனால்சுவாமி தீண்டாதார்களுக்கு சமமாகிவிட்டாரென்றும் பொருள்படும்படியான சில வார்த்தைகளும் சொன்னார். இது விஷயம் யாவும் ஜமீன்தாருக்கு தெரிக்கவிக்கப்பட்டது. ஜமீன்தார் அவர்கள் நேரில் சுவாமியின் சந்நிதிக்கு வந்து, இவ்விஷயத்தைக் குறித்து விசாரிக்கையில், ஒரு நவீன ஆகம சித்தாந்தி பட்டம் பெற விரும்புகிறவரான குருக்கள் பலவிதமான ஆக்ஷேபனைகளும், தர்க்கங்களும் செய்ய, ஜமீன்தாரவர்கள் எலக்ட்ரிக் விளக்கு சுவாமிக்குச் சாத்துமுறை செய்வது ஆகமங்களுக்கு விரோதமாயின் முன்பே தெரிவித்திருக்கவேண்டுமென்றும், அவ்விதம் ஆகமங்களுக்கு விரோதமென முன்பே தெரிவிக்காது சாத்தப்பட்டபிறகு அதை எடுப்பது நியாயமாகாதென்றும், அப்படிக்கு ஆகமங்களுக்கு விரோதமாயின் அதற்குச் செய்யவேண்டிய சகலவித பிராயசித்தம், சுத்தி முதலியவைகளின் செலவை தாம் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியும், குருக்கள் கேளாது மூர்க்கத்தனமாயிருந்து விட்டார். பிறகு ஜமீந்தாரவர்கள் அந்த விளக்குகளை தம்மிடத்தில் வாபீசு செய்து விடும்படி கேட்கவும், கொடாததால் போலீசாற்கு தெரிவிக்கப்பட்டது, குருக்கள் சொல்லியபடிக்கு, எலக்ட்ரிக் விளக்குகளால் அணியப்பட்ட சுவாமி தீண்டாமையடைந்திருந்தும், சுவாமிக்கு யாதொரு பரிகாரமும் செய்யாது, சுவாமியை ஊர்வலம் செய்தற்கு எந்த ஆகமத்தின் ஆதாரமோ தெரியவில்லை. ஆதலால், குருக்கள்கள் எவராயினும் சரி; இதைப் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது அவர்கள் உணரவேண்டும். எலக்ட்ரிக் விளக்கை சுவாமியின் மேல் முன் அலங்கரித்து பின்பு எடுத்து விட்டதைக் குறித்து ஊரிலுள்ள முக்கியஸ்தர்களாவது, இதர மகாஜனங்களாவது சிரத்தையுடன் கவனம் செலுத்தாததைக் குறிக்க மிகவும் வருத்தமாயிருக்கிறது. தவிர, தேவஸ்தான தர்ம கர்த்தாவும் குருக்கள்களின் மாயவலையிலகப்பட்டுவிட்டதால், அவரும் அவருடைய சிப்பந்திகளைக் கண்டிக்காது போயினது மிகவும் விசனிக்கத்தக்கது. இதுநிற்க, 28-1-26-ம் தேதி சுவாமி இரதாரோஹண சமயத்தில் உள்ளூர் கனவானால் வழக்கப்படி செய்துவரும் மாலை உபயத்திற்கு கனவான் மாலை கொண்டு வந்து குருக்களிடம் கொடுத்து சூட்டும்படி வேண்ட, மாலையை சுவாமிக்குச் சாத்தாது குருக்கள் மறுத்து விட்டார். இத்தருவாயில் இவ்வூர் யூனியன் போர்டு தலைவரான ஓர் இளங்குமார், “குருக்கள் செய்வது அடாத காரியமென்றும், மாலையை சுவாமியின் மேல் சாத்தவேண்டுமென்று” கட்டாயப்படுத்தியதின் பேரில் மாலை சாத்தப்பட்டது. இதுநிற்க, ஐந்தாம் திருவிழாவாகிய மயில்வாகனக் காட்சியன்று ஆஜரில்லாத சில தேவஸ்தான கமிட்டி அங்கத்தனர்களுக்கு அன்று எலக்ட்ரிக் விளக்கு விஷயமாய் நடந்தேறிய விஷயங்கள் தெரிவிக்கப் பட்டதின் பேரில் அவர்களுள் சிலர் 29—1—1926-ல் ஒன்று கூடி யோசித்து, மறுபடியும் ஜமீன்தாரவர்களை இவ்வூருக்கு அழைப்பித்து, சுவாமிக்கு அந்த எலக்ட்ரிக் புஷ்ப விளக்கைச் சாற்றி ஊர்வலம் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து ஜமீன்தாரவர்களை அழைத்துவர தூது அனுப்பப்பட்டது. இவ்வழைப்புக்குட்பட்டு அவர்கள் 1—2—26ல். வந்து சேர்ந்தனர். 29—1—26ல் கமிட்டியார் யோசித்தபடிக்கு 1—2—26ல் சுவாமிக்கு எலக்ட்ரிக் புஷ்ப விளக்கு சாத்தி ஊர்வலம் செய்யப்பட்டது. இதுவுமன்றி சில வருடங்களாக ருத்திரகலசம் வைத்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து கொண்டு வந்த வழக்கத்தை இந்த குருக்கள்கள் சேர்ந்து நிறுத்தி விட

பழைய ஆசாரத்தையும், முன்போலவே சரிவர நடத்தவேண்டுமென்னும் அபிப்பிராயத்தால் ஸ்ரீமான். உலகபுரம் கவுண்டரவர்கள் நேரில் மலை சுவாமி சந்நிதிக்குச் சென்று யாதொரு தகராறின்றி விஷயங்களை நடத்தி வைத்திருப்பதும் பாராட்டற்பாலது. இதுவும் நிற்க, மலையில் ஸ்ரீ தண்டபாணி சுவாமியின் கழுத்திலிருந்த சுமார் 7, 8 பவுன் எடையுள்ள தங்கக்காரை காணமற் போய் விட்டது. சுவாமியிடம் சென்று புழங்கிக் கொண்டிப்பவர்கள் குருக்கள்களைத் தவிர வேறு ஒருவருமில்லை. ஆதலால், இது எவர் முறையில் காணமற் போயிற்றென்றும், உண்மை யாதென உணரும் பொருட்டும், சில கமிட்டி மெம்பர்கள் ஜமீன்தார் முன்னிலையிலும், சில மகா ஜனங்கள் முன்னிலையிலும், இந்த 24 வீட்டுக் குருக்கள்களையும் உண்மை சொல்லும்படிக்கு இரவு 10-மணி முதல் காலை 4-30 வரை சாம, பேத தான[illegible]ம் [illegible]வகையாலும் கேட்டும், உண்மை வெளிப்படாததின் பொருட்டு, சுமார் 5-மணிக்கு போலீஸில் தெரிவிக்கப்பட்டது. மற்றும் இது விஷயமாய் அன்று காலை சுமார் 9-மணிக்கு சில முக்கியஸ்தர்கள் கூடி யோசித்து காணமற்போனநகையின் கிரயத்தை கொடுத்துவிட்டால், மன்னித்து விடுவதாகவும், செல்லப் பெருக்கல் [illegible] செலுத்தி விட்டதாகவும் தெரியவருகிறது.. இவ்விதம் இக்கனவான்கள் இவ்விஷயத்தை முடிவு செய்வதற்கு யாது அதிகாரம், எவ்விடமிருந்து பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பொது ஜனங்கள் அறிய ஆவலுள்ளவர்களாகி யிருக்கிறார்கள். மற்றும் குற்றம் செய்தவர் இன்னாரெனக்கண்டு பிடிக்காது அப்பனையும், பையனையும் ஒன்றெனக் கருதிக் குருக்கள் அனைவரிடத்திலுமாக காணமற்போன நகையின் கிரயத்தை வசூலித்திருப்பது மிகவும் அதர்மமான செய்கையாகும் என்பதும், எனையோரும் கவனிக்கவேண்டும். இது வுமன்றியில் களவு செய்தவரை யாரெனக்கண்டு பிடியாது விட்டுவிடில், அக்கள்வனுக்கு முன்னிலும் தைரியம் முற்றி தினே தினே அவன் தொழிலை அபிவிருத்தி செய்ய சமயமும், ஊக்கமும் ஏற்படுத்துவது போலாயிற்றன்றோ? இங்ஙனம் களவுபோனது முதல் தடவையுமன்றே. இதற்குமுன் இத்தேவாலயத்தில் பன்முறை இவ்விதம் சம்பவித்திருந்தும் இவர்களின் யோக்கியதாம்சங்களை எல்லோரும் பரிபூரணமாக அறிந்திருந்தும் [illegible] சுயேச்சையாகவிட்டு விட்டது நியாயமெனப்புலப்படவில்லை. சில வருடங்களுக்குமுன் கைலாச நாதர் ஆலயத்தில் அம்மனைப்பெயர்த்து அதிலுள்ள திரவியங்களை எடுத்துவிடப்பட்ட குற்றத்திற்கும், மன்னிப்புக்கொடுக்கப்பட்டது. பிறகு வெள்ளி மயில் வாகனத்தில் மூக்கிலிருந்த தங்கமுலாம் சர்ப்பத்தைத் திருடிகொண்டு போகப்பட்டதும் சரியானபடி கவனிக்காது விடப்பட்டது. சென்ற வருஷத்தில் மலையில் அம்மனைபெயர்த்துமறுபடி ஸ்தாபித்ததற்கும், கமிட்டியில் சிலவுக்குத் தொகை கொடுத்தது தவிர, யாதொரு நடவடிக்கையும் நடத்தாது மன்னிக்கப்பட்டது. இவ்விதம் தேவாலய சிப்பந்திகள் செய்துவரும் சகல தப்பிதங்களுக்கும் நியாயமானபடியும், சட்டப்படியும் நடவடிக்கைகள் தொடராது விட்டுவிட்டால், இத்தேவாலயங்களின் கதி நாள்படஎன்னமாகுமென்று அறியவேண்டியது. ஒரு பொது ஸ்தாபனத்தில் முக்கியாம்சம் பெற்றவர்கள் இவைகளை நன்கு ஆராய்ந்து தக்கபடியும் சட்டப்படியுள்ள நடவடிக்கைகள் நடத்தாது விட்டுவிடில், அவர்கள் அவர்களுடையஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட வேலையைச்சரியாக செய்தவர்களாகமாட்டார்கள். ஆகையால் இவ்விஷயத்தில் எண்டோவ் மெண்டு போர்டார்கள் இதைக்கவனிப்பார்களாக. கடைசியாக குருக்கள் யாவரும், (முக்கியமாய் மூன்று பேரைத்தவிர,) கோயில் நகையை திருடவில்லையென்று, ஊர் பொது ஜனங்கள் முன்னும் முக்கியஸ்தர்கள் முன்னும் சத்தியம் செய்தார்கள்.

சிரகிரிவாசன்.

---

## மடாதிபதிகள் ஆச்சார்யாபிஷேகமும், கணிகை தரிசனமும்.

தமிழ் நாட்டில் சில பெண்களின் துரதிருஷ்டவசம், அக்காலத்திய பழக்கவழக்கங்களாலும் அர்த்தமற்றவகையில் வேதாகமங்களை நமது பெரியார்கள் உபயோகித்து வந்ததாலும், சில பெண்மணிகளுக்கு பல்வகையில் கஷ்டத்தையும், மானநஷ்டத்தையும் உண்டாக்கிவிட்டார்கள். தற்காலத்தில் கோவில் கும்பாபிஷேகங்களிலும், மடாதிகள் ஆச்சார்யாபிஷேகத்திலும் சிற்சில இடங்களில் கணிகை தரிசனம் செய்யப்பட்டு வருகிறது. இது காரணமாக அநேக கும்பாபிஷேகத்திலும், ஆச்சார்யாபிஷேகத்திலும் சிறு வயதுள்ள பெண்மணிகளுக்குப் பொட்டுக்கட்டி கணிகா தரிசனத்திற்கு நிறுத்திவைக்கின்றனர். அதன்பின் அப் பெண் விபசாரம் செய்து பிழைக்கவேண்டி வருகிறது. தச தரிசனத்தில் இக்கணிகை தரிசனம் சிறு பெண்களை அநியாயமாகப்பொட்டுக்கட்டி விபசாரியாக்கக் காரணமாயிருந்து வருகிறது. முற்காலத்தில் உயர்ந்த நோக்கத்தோடு ஏற்பட்ட ஓர் புனிதமான இவ்வழக்கத்தை வேறு அர்த்தம் செய்துகொண்டு, கணிகைதரிசனமென்ற பேரால் பெண்களைக் கெடுத்துவருகின்றனர். விபசாரஞ்செய்து பிழைக்க வழிகண்ட சில கிழவிகள் ஸ்வாமியின் தலையில் பழியைப்போட்டு ஒன்றும் அறியாத சிறு பெண்களுக்கு பொட்டுக்கட்டி விபசாரிகளாக்கி, நாட்டிற்கும் நம் நாட்டுப்பெண்களின் மானத்திற்கும், அளவற்ற தீங்கிழைத்துவருகின்றனர். இக்கொடிய வழக்கத்தை எந்தெந்த சமூகத்தினர் கையாண்டு வருகின்றனரோ, அச்சமூகத்திலுள்ள ஆண்மக்களும், பெண்மக்களும் இத்துர்ப்பழக்கத்தை அறவே ஒழிக்க பகீரதப் பாடுபட்டு வருகின்றனர். இந்த இயக்கத்திற்கு ஒப்புயர்வற்ற மகாத்மா காந்தியடிகள், ஸ்ரீமான்களான, வி. எப். ஆண்ட்ரூஸ், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், வி. கலியாணசுந்தர முதலியார். ஸ்ரீமதிகள் யாமினிபூரணதிலகம்மாள், ராமாமிர்தம்மாள் முதலிய தலைவர்கள் உயர்ந்த நோக்கத்தோடு உதவி செய்துவருகிறார்கள். நாட்டில் எக்குலத்தினர் இவ்வழக்கத்தை அநுஷ்டித்தாலும் இந்தியப்பெண் என்றமுறையில் எல்லா இந்தியர்களுக்குமே இக்குறைவு வந்து சேருவதால் நாட்டிலுள்ள எல்லா சமூகத்தாரும் இத்துர்ப்பழக்கத்தை ஒழித்துப்பெண்மணிகளின் மானத்தைக்காப்பாற்ற ஆதரவு காட்ட வேண்டியது அவரவரவர்கள் கடமையாகும்.

இச்சீர்திருத்த விஷயமாய்க் கிளர்ச்சி மேலோங்கிவரும் இக்காலத்திலுங்கூட, சில மடாதிபதிகள் இத்துர்ப்பழக்க வழக்கத்தை ஆதரிக்க கணிகை தரிசனம் என்ற பேரால் முன்வருகின்றனர். இது மிகவும் அநியாயமாகும். மடாதிபதிகளுக்கு பட்டமாகும்போதும் கோவிலில் கும்பாபிஷேகமாகும்போதும், கணிகை தரிசனம் செய்யும் வழக்கம் இவர்களுக்கு எந்த ஆதாரத்தைக் கொண்டு, வந்ததென்பது விளங்கவில்லை. பெரும்பாலும் ஆகமத்தின் ஆதாரத்தைக் கொண்டே மடாலயங்களில் ஆச்சார்யாபிஷேகம் செய்யப்படுகின்றன. ஆச்சார்யாபிஷேகத்திற்கு கன்னிகாதரிசனமாவது, கணிகை தரிசனமாவது செய்யவேண்டுமென்று எந்த ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது? எதிலும் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது ஆகம வகையில் வழக்கமாகக் கையாண்டுவரும் காமிகாகமம் சிவார்ச்சனா தீபிகையில் சமயதீக்ஷாவிதி 795 ஸ்லோகத்திலும், ஷை சிவார்ச்சனாதீபிகையில் ஆச்சார்யாபிஷேக விதி 70 ஸ்லோகத்திலும், அகோர சிவாச்சாரியாரியற்றிய கிரியாக்கிரம ஜோதி பூர்வ பக்கத்திலும், இன்னும் மணிப்பிரவாளம் முதலிய எட்டுக்கிரந்தங்களிலும், அகோரசிவாச்சாரியாரியற்றிய சிவப்பிரதிஷ்டாசாரிகை என்னும் புத்தகத்திலும் ஆச்சாரியாபிஷேகத்திற்குக் கணிகை தரிசனம் சொல்லப்படவில்லை. ஆகமத்தைப்பரிசோதித்ததில் ஈஸ்வர கும்பாபிஷேகத்திற்குப் பின், குருநாதன சாந்நித்திய [illegible] பெருட்டு மூன்றே முக்கால் நாழிகை [illegible] மாம் தரிசனம் செய்வதாகப் [illegible] கிரந்தங்கள் விதித்திருக்கின்றன. அதற்குப்பின் பத்து தரிசனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது கோ தரிசனம் 1, ஆச்சாரிய தரிசனம் 2, பிராமண தரிசனம் 3, கண்ணாடி தரிசனம் 4, கும்ப தரிசனம் 5, தீபதரிசனம் 6, கன்னிகா தரிசனம் 7, ருத்திரகணிகை தரிசனம், 8, ராஜ தரிசனம் 9, சிவபக்தர் தரிசனம் 10 இந்தப்பத்துத் தரிசனங்களும் ஸ்திர லிங்கமாகிய எம்பெருமானுக்கே உண்டல்லாது வேறே எதற்குமில்லையென்று வேதாகமங்கள் கூறுகின்றன. மற்றுள்ள சங்கம லிங்கங்களுக்கு மேற்கண்ட தரிசனங்கள் சொல்லப்படவில்லை. அல்லது வேறு ஆகமங்களிற் கூறியுள்ளதாயின் இத்துர்ப்பழக்கத்திற்கு இடங்கொடுக்கும் நம் மடாதிபதிகள் [illegible] விளக்கவேண்டுகிறேன். இன்னும் இவைபற்றி ஆராய்ச்சி செய்வோமானால் ருத்திர கணிகையென்பவள் உற்பத்தியும், அவளிருக்கவேண்டிய தூய்மையும், அவளிருக்கவேண்டிய நன் நிலைமையும், ஆகமத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஆகமப்படிக்குள்ள ருத்திரகணிகை இந்தத் தேசத்திலிருப்பதாக இவ்வழக்கத்திற்குடன்படும் எந்த மடாதிபதிகளாவது கூற முன் வருவார்களா?

இக்காலத்திலுள்ள தாசிகளை ருத்திர கணிகையென்று எந்த மூடனும் இந்த உலகத்தில் சொல்ல முன் வரமாட்டான். ஜன சமூகத்திற்குத் தீங்கிழைக்கும் இத்தகைய சம்ஸ்காரங்களை, ஈஸ்வரன் திருவாக்கிற் பிறந்திருக்கும்; ஒருக்காலுமில்லை. இத்தகைய ஆகமங்களையும், வேதங்களையும் திரித்து ஒன்றுக்கு ஒன்பது லக்ஷமாக பிராமணர்கள் எழுதி வைத்துவிட்டார்களென்று தற்காலத்தில் சந்தேகிக்கும் புது உலகத்திற்கு கணிகாதரிசனம் செய்யும் மடாதிபதிகளும் ஓர் சாக்ஷியாக விளங்கவில்லையா என்பதையும் மடாதிபதிகள் கவனிக்கவேண்டும். தேசத்தில் மதம், தர்மம், நீதி, சன்மார்க்கம் இவைகளை நிலைநாட்ட வேண்டியும் இவைகளுக்கு ஆபத்து வருங்காலத்தில் ஜன சமூகத்திற்குள் சற்போதனமுறையில் மீண்டும் சன்மார்க்கம் வளர முயற்சிக்கவேண்டியுமே தான் மடாதிபதிகள் ஏற்பட்டனர். அத்தகைய ஸ்தாபனங்களில் விபசாரத்தைப் பெருக்கும் ஓர் வழக்கத்தை அநுஷ்டிப்பது எவ்வாறு தர்மமாகும். ஆகையால் தற்காலத்தில் ஜனசமூக முன்னேற்றத்திற்கு உண்டாயிருக்கும் உற்சாகத்தையும், மடாலயங்கள எதற்காக நம் நாட்டில் உண்டாயின என்ற அடிப்படையான கொள்கையையும், தற்காலத்திலும் கணிகைதரிசனம் செய்யும் மடாதிபதிகள் கவனித்து இக்கொடிய பழக்கத்தை அடியோடு நீக்கிவிடவேணுமாயும், அவ்வாறு நீக்கிவிடத்தயாராயிருக்கும் கூட்டற்ற தங்கள் நற்செய்தியை பொது ஜனங்களுக்கு பத்திரிகைகள் வாயிலாகப் பிரஸ்தாபப்படுத்த வேணுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எஸ். ஏ. கணேசன்.



## உண்மையான கதர்.
## கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

S. ராமநாதன்
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:— ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

---

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் செலவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், ஜென்னி பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் சுத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

S. ராமநாதன்
காரியதரிசிசத்தர், இலாகா.

---

## நவ இந்தியா.

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர், ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார். வருட சந்தா ரூ. 5.

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I. Ry.

---

TO LET

---

## "தேசோபகாரி"

பர்மாவில் விதேலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி, ரங்கூன்.

---

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0
காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

---

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

---

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பொருலாட.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீர்ணம் முதலிய வியாதிகளை சாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரையஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதாராஸ்.

---

## 100-ஆ காலண்டர் இனாம்.

1004 உபதேசம் ரூ. 2-0-0, சச்சிதானந்த சிவம் ரூ. 1-2-0, மோடிசாதனம் ரூ. 4-0-0, ஜாதக அலங்காரஉரை ரூ. 2-0-0, ஞானக்கோர்வை ரூ. 1-8-0, பட்டினத்தார் உரை ரூ. 2-0-0, கந்தரநுபூதி ரூ. 0-8-0, சஷ்டிஉரை ரூ. 0-8-0, கந்தர் அந்தாதிஉரை ரூ. 0-12-0, திருமுருகாற்றுப்படை உரை ரூ. 0-12-0.

சாதுரத்ன சற்குரு புத்தகசாலை,
பார்க்டவுன், (கு) சென்னை.

---


## டைமண்ட் பிரஸ், ஈரோடு.

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

---

## முக்கிய கவனிப்பு.
## 18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேவ்ஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.



குடி அரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 ஷ்த்திய அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலம் காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-வருஷ கியாரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0

நெ. 2 இபான் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0

நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.